Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 360 | வெள்ளிக்கிழமை | கார்த்திகை 10 ஆம் நாள் 26 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## பல்கலை. அனுமதி பதிவுகள் ஆரம்பம்

கொழும்பு, நவ. 26
பல்கலைக்கழகம் செல்வதற்கு அனுமதி பெற்ற 2020ஆம் ஆண்டுக்கான உயர்தர வகுப்பு மாணவர்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கி 14

# நினைவேந்தல் உரிமையை தடுக்க முற்படுவது தவறு!

அதிஉயர் சபையில் சுட்டிக்காட்டியது ஐக்கிய மக்கள் சக்தி

**கொழும்பு, நவம்பர் 26**
**"போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதென்பது உலக நடைமுறை. அதில் எந்தவித தவறும் கிடையாது" - என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் நேற்று சுட்டிக்காட்டியது.** 15



## யாழ்ப்பாணப் பல்கலையில் வீரமறவர்களுக்கு மலரஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 26
மாவீரர் வாரத்தையொட்டி வீரமறவர்களுக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மாணவர் 14

## நினைவுகூரல்களை மேற்கொள்ளமுடியும்

கட்டளையைத் திருத்தி
முல்லை. நீதிமன்று அனுமதி

முல்லைத்தீவு, நவ. 26
தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றின் நிகழ்வை, நினைவுபடுத்தக்கூடியதாக நினைவுகூரல்களை மேற் 15

## தலைவர் பிரபாகரனின் பிறந்ததினம் இன்று!

வடக்கு - கிழக்கில்
பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிப்பு



யாழ்ப்பாணம், நவ. 26
தமிழ் மக்கள் தமது தாயகப் பகுதியில் சகல உரிமைகளோடும், சுதந்திரமாக வாழ்வதற்காகப் போராடிய, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பி 15

## எனது நல்லெண்ண அழைப்பை புலம்பெயரிகள் ஏற்கவேண்டும்

**கோத்தாபய கோரிக்கை**

கொழும்பு, நவ. 26
ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தொடரில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு விடுத்த அழைப்பை பொதுச் செயலாளரிடம் நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அது தொடர்பாக புலம்பெயர்தமிழர்கள் நல்லெண்ணத்துடன் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன் 15

## குறிஞ்சாக்கேணிக்கு 9 மாதங்களில் பாலம்

அமைச்சின் செயலர் உறுதி

கொழும்பு, நவ. 26
'சுபீட்சத்தின் நோக்கு' திட்டத்தில் உறுதியளிக்கப்பட்ட அனைத்து வீதி அபிவிருத்தி வேலைத் 15

### முச்சந்தி முரளி

"பொங்கிடும் கடற்கரையோரத்திலே
மழை பொழிந்திடும் கார்த்திகை மாதத்திலே
மங்களம் தங்கிடும் நேரத்திலே
எங்கள் மன்னவன் பிறந்தான் ஈழத்திலே



## சிலிண்டர்கள் வெடிப்பு: நேற்று 4ஆவது சம்பவம்

கொழும்பு, நவ. 26
எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் அதிகரித்துள்ளநிலையில், நேற்றும் கொழும்பில் எரிவாயு சிலிண்டர் வெடித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் சிலிண்டர் பாவனையாளர்கள் அச்சத்தில் உள்ளனர். ஏற்கனவே 14

## வெடித்துச்சிதறும் சிலிண்டர்கள்; உள்ளடக்க மாற்றமே காரணம்!

அரசாங்கத்துக்கு ஐ.தே.க. சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 26
சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்துச் சிதறுகின்றன. அவற்றின் உள்ளடக்கங்களின் அளவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றமே அவை வெடிப்பதற்கான பிரதான காரணமாகும். இது தொடர்பில் துறைசார் நிபு 15

## வடக்கில் இன்றும் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 26
வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. 15

## வவுனியாவில் அடைமழை 115 பேர் இடம்பெயர்வு

வவுனியா, நவ. 26
வவுனியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக 31 குடும்பங்களைச் சேர்ந்த 115 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்று, இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.
வவுனியாவில் 03 குடும்பங்களைச் சேர்ந்த 11 அங்கத்தவர்களும், வவுனியா வடக் 15

## பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக மீளப்பெறமாட்டோம்!

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 26
பயங்கரவாத தடைச்சட்டத்தை நாம் முழுமையாக மீளப்பெறமாட்டோம். 42 வருடங்கள் பழமையான அந்த சட்டத்தை மறுசீரமைக் 14

## பதுக்குடியிருப்பில் யானை தாக்கி ஒருவர் சாவு!



கொழும்பு, நவ. 26
முல்லைத்தீவில், புதுக்குடியிருப்பு மன்னாங்கண்டல் கிராமத்தில் காட்டுயானை தாக்கியதில் ஒருவர் உயிரி 14

## படகுப்பாதை விபத்து: தவிசாளரும் கைது

திருகோணமலை, நவ. 26
கிண்ணியா - குறிஞ்சாக்கேணி படகு விபத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நான்காவது சந்தேகநபரான கிண்ணியா நகர சபை 14

# சஹ்ரானை கைது செய்யத் தயாரான அதிகாரிகள் கைதானது ஏன்?

## விவாதம் கோரும் முன்னாள் சட்டம், ஒழுங்கு அமைச்சர்

**கொழும்பு, நவ. 26**



**சஹ்ரானைக் கைது செய்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்த அதிகாரிகள், திடீரென கைது செய்யப்பட்டது ஏன்? நாமல் குமார என்பவரின் வருகையின் பின்னணி என்ன? அரச உளவு சேவை பிரதானி எதற்காக அறிக்கைகளை மறைத்தார், தற்போது ஏன் அரச சாட்சியாளராக மாறியுள்ளார். இவை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நாடாளுமன்றத்தில் விவாதம் அவசியம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:

நான் சட்டம், ஒழுங்கு அமைச்சராக இருந்தபோது, 5 ஆம் மாதம் 19 ஆம் திகதி அரச உளவுப்பிரிவின் அறிக்கையொன்று கிடைத்திருந்தது. இது தொடர்பில் துறைசார் அமைச்சர் என்ற அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பணிப்பாளர்களுடன் நான் கலந்துரையாடல்களை நடத்தினேன்.

இதனையடுத்து சஹ்ரானைக் கைது செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக 7ஆம் மாதம் 2 ஆம் திகதி மட்டக்களப்பு நீதிமன்றத்தில் பிடியாணைக் கூட பெறப்பட்டிருந்தது. ஆனால் சஹ்ரானைக் கைது செய்ய நாம் நடவடிக்கை எடுக்கவில்லை என சிலர் குற்றஞ்சாட்டு கின்றனர்.

52 நாள்கள் அரசியல் சூழ்ச்சியின்போது சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவிலிருந்து நான் நீக்கப்பட்டேன். மீண்டும் அந்தப் பதவி எனக்குக் கிடைக்கவில்லை. அந்தக் காலப்பகுதியில்தான் சூழ்ச்சியொன்றும் இடம்பெற்றது. நாமல் குமார என்பவர் திடீரெனத் தோன்றி, முன்னாள், இந்நாள் ஜனாதிபதிகளைக் கொலை செய்ய சூழ்ச்சி இடம்பெற்றதாக தகவல் வெளியிட்டார். இறுதியில் என்ன நடந்தது, சஹ்ரான் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பணிப்பாளர் கைது செய்யப்பட்டார். அதன்பின்னர் குற்றப் புலனாய்வுப் பணிப்பாளர் சானி அபேசேகரவும் கைது செய்யப்பட்டார். நாமல் குமார வெளியிட்ட சம்பவத்துக்கு என்ன நடந்தது?

ஜூன் 7 முதல் ஒக்ரோபர் 24 ஆம் திகதிவரை அரச உளவுப் பிரிவுப் பணிப்பாளர் எனக்கு எந்தவொரு அறிக்கையையும் அனுப்பவில்லை. பொலிஸ்மா அதிபருக்கு 12 அறிக்கைகள் அனுப்பியிருந்தாலும் அவ்வாறு அனுப்பப்பட்ட அறிக்கைகளில் நான்கே எனக்கு அனுப்பட்டுள்ளன. ஜனாதிபதி ஆணைக் குழுவில் சாட்சியம் வழங்கும்போதுதான் இது எனக்குத் தெரியவந்தது. எதற்காக அறிக்கைகள் மறைக்கப்பட்டன. அவர் தற்போது அரச சாட்சியாக மாறியுள்ளார். இது தொடர்பில் விவாதம் நடத்தப்பட வேண்டும். மூன்று நாள்களாவது அவசியம் - என்றார்.

விவாதத்துக்கு அரசு தயாராகவே உள்ளது என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா பதிலளித்தார். (ஒ-44)

# மன்னார் நகரசபையின் பட்ஜெட் நிறைவேறியது

மன்னார்.நவ.26

மன்னார் நகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மன்னார் நகரசபையின் பட்ஜெட்டுக்கான சபை அமர்வு, மன்னார் நகர சபைத் தலைவர் ஞா. அன்ரனி டேவிட்சன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அனைவரின் ஒத்துழைப்போடும் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஒ-4-213)

# எங்கள் அடி வேறுமாதிரி

## மைத்திரி பதில்

கொழும்பு, நவ. 26

எம்மைத் தாக்கினால், நாம் திருப்பி அடிக்க மாட்டோம். கருணை காட்டுவோம். ஆனால் ,எமது அடி வேறுமாதிரி இருக்கும் என்பதையும் கூறிவைக்கின்றோம்.' இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன பதிலடி கொடுத்துள்ளார்.

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வெளியிட்ட கருத்துகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே சபையில் நேற்று இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மைத்திரிபால சிறிசேன மேலும் கூறியவை வருமாறு:

முன்னாள் ஜனாதிபதி என்ற அடிப்படையில் என்மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க வேண்டிய உரிமை எனக்கு உள்ளது. ஆனால், நாம் திருப்பி அடிக்கமாட்டோம். கருணை காட்டுவோம். அவர்களின் பாணியில் திருப்பி அடிக்கும் குணம் எமக்குக் கிடையாது. நாம் அடித்தால் அது வேறுமாதிரியாக இருக்கும் கண்ணாடிக் கூட்டுக்குள் இருந்துகொண்டு கல் எறிவதற்கு நான் விரும்பவில்லை. நான் ஜனாதிபதியாக இருந்தபோது, ஜனாதிபதியொருவர் எப்படிச் செயற்பட வேண்டும் என முன்மாதிரியை வழங்கினேன். அடித்துக்கொண்டால் எவ்வாறான காயங்கள் ஏற்படும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தேர்தலில் வெற்றிபெறுவதற்கு கூட்டணி அமைத்து, அதன்பின்னர் அரசுக்குள் மோதல் ஏற்பட்டு கூட்டணியை முறித்துக்கொண்டால் என்ன நடக்கும் என்பதை கடந்த கால அரசியல் வரலாறு எமக்குப் பாடம் கற்றுக்கொடுத்துள்ளது. எனவே, சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைகளிலேயே அரசின் மூன்றிலிரண்டு பலம் தங்கியுள்ளது. தற்போதைய குழப்ப நிலைமைக்கு விவசாயத்துறை அமைச்சர்தான் காரணம். நீங்கள் உங்கள் தலை வரைப் புகழ்ந்து பேசுங்கள். அதில் பிரச்சினை கிடையாது. ஆனால், எங்களைத் தாக்க வேண்டாம். அரசுக்குள் குழப்பத்தை ஏற்ப டுத்திக்கொள்ள வேண்டாம் - என்றார். (ஒ-44)

# அடித்தால் திருப்பியடிப்போம்; நாங்கள் திருநங்கைகள் அல்ல

## நாடாளுமன்றில் அமைச்சர் ஆவேசம்

கொழும்பு, நவ. 26

நாங்கள் திருநங்கைகள் அல்லர். முதுகெலும்பிருக்கின்றது, எதையும் முன்னால்தான் கதைப்போம். எம்மைத் தாக்கினால், நாமும் தாக்குவோம். அரசில் இருந்தாலும் பரவாயில்லை, இல்லாவிட்டாலும் பரவாயில்லை. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால ஸ்ரீசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது உரையாற்றிய சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பில் வெளியிட்ட தகவல்கள் தவறானவை எனச் சுட்டிக்காட்டியதுடன், மைத்திரிபால சிறிசேன எதற்கெல்லாம் நிதிகளை ஒதுக்கீடு செய்தார் என்பது தொடர்பிலும் தகவல்களை வெளியிட்டார்.

அத்துடன், அடிப்பதாக இருந்தால் எங்களுக்கு அடிக்கவும். எங்கள் தலைமையைத் தாக்க வேண்டாம். அவ்வாறு தாக்கினால் அது பெரும் பிரச்சினைக்கு வழிவகுக்கும். குழிகளை தோண்டத்தோண்ட நாற்றமே வரும் என கடுந்தொனியில் தயாசிறி குறிப்பிட்டார்.

சிறிதுநேரத்தின்பின்னர் சபைக்கு வந்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, நான் சபையில் இல்லாத சந்தர்ப்பத்தில், தயாசிறி ஜயசேகர எனது பெயரைப் பயன்படுத்தி, இழிவாகப் பேசியுள்ளார். குழிகளைத் தோண்டினாலும் நாறும் எனக் குறிப்பிட்டார். ஆம். அது உண்மைதான். குழிகளைத் தோண்டினால் அலோசியஸின் செக் கதை முதல் எல்லாம் வெளிச்சத்துக்கு வரும்.

தயாசிறியையோ அல்லது அவரின் கட்சித் தலைவரையோ நான் தனிப்பட்ட ரீதியில் தாக்கிப் பேசவில்லை. முன்னாள், இந்நாள் ஜனாதிபதிகளுக்கான ஒதுக்கீடுகளை ஒப்பிட்டே கருத்துக்களை முன்வைத்தேன். எமது ஜனாதிபதி செயலகத்துக்கான செலவினங்களைக் குறைத்துள்ளார். இவ்வாறு அவர் செய்துள்ள நல்ல விடயம் பற்றிக் கதைக்கும் உரிமை எனக்கு இருக்கின்றது. செலவினங்கள் தொடர்பில் தகவல்களை சபையில் சமர்ப்பிக்கின்றேன்.

அதேபோல மூன்று வீடுகள் இணைக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எனக்கு அனுப்பியுள்ள கடிதத்தையும் முன்வைக்கின்றேன். கட்சித் தலைவரை நாம் தாக்கவில்லை. எனவே, எங்களைத் தாக்க முற்படவேண்டாம். அடித்தால், நாங்களும் திருப்பி அடிப்போம். திருநங்கைகள் அல்லர் நாம். நான் தவறிழைத்திருந்தால் விவாதத்துக்கு வாருங்கள். அதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன்.



இன்றைய நிலைமைக்கு விவசாயத்துறை அமைச்சரே பொறுப்புக்கூற வேண்டும் என மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுகின்றார். அவரின் ஆட்சிக் காலத்தில் நெல் விலை 25 ரூபா. தற்போது 80 ரூபா. அப்போது விவசாயிகள் நஞ்சு அருந்தவில்லையா? இரசாயன உரம் தொடர்பில் அரசு எடுத்த நிலைப்பாட்டுடன் நான் இருந்தேன். அது நல்ல முடிவு எனவே, கொடும்பாவிகளை எரித்தாலும், அடுத்த தேர்தலில் மக்கள் என்னை வீட்டுக்கு அனுப்பினாலும் நான் நல்ல திட்டத்தை ஆதரிப்பேன். கடந்த தேர்தலில் ஆலை உரிமையாளர்களிடம் பணம் வாங்கினார்கள். இன்னும் கதைத்தால் பல விடயங்களை குறிப்பிட வேண்டிவரும் - என்றார். (ஒ-44)

# ஈஸ்டர் தினத் தாக்குதலுக்கு நல்லாட்சி அரசே பொறுப்பு!

## ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு





கொழும்பு, நவ.26

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு முன்னாள் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை உள்ளிட்ட அரசே பொறுப்புக்கூற வேண்டும்.**

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கல்யாணி பொன் நுழைவாயில் பாலத்தின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக கடந்த அரசு நியமித்திருந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தொடர் நடவடிக்கைகளுக்காக நீதியரசர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு வெளிப்படுத்தியுள்ள குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டத்தை நிறைவேற்ற முடியும்.

கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கின்ற மற்றும் வெளியேறுகின்ற வாகனங்கள் காரணமாக, களனிப் பாலத்தில் ஏற்படுகின்ற அதிக வாகன நெரிசலுக்குத் தீர்வாக, இந்தப் புதிய மேம்பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நாட்டை மூடவேண்டிய நிலை ஏற்படாதிருப்பின், உறுதியளிக்கப்பட்ட அனைத் துத் திட்டங்களையும் நிறைவு செய்ய முடியும் - என்றார். (எ-இ)

# பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது

சாவகச்சேரி,நவ.26

வீதிச் சமிக்ஞையில் நிறுத்தப்பட்ட டிப்பர் மீண்டும் புறப்பட ஆரம்பித்தபோது, பிரேக் கம்பி அறுந்ததில், வீதியின் மறுபக்கத்தில் உள்ள கடைக் கட்டடத்தின்முன்பாக அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்புக் கம்பியுடன் மோதி நின்றது. இந்தவிபத்து கொடிகாமம் நகர்ப்பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த டிப்பர் கொடிகாமம் சந்தியில் உள்ள வீதிச் சமிக்ஞையில் நிறுத்தப்பட்டு, மீண்டும் புறப்பட்டபோது வீதியின் மறுபக்கத்தில் சந்தைப் பகுதியை அண்டியுள்ள கடையுடன் மோதும் நிலை ஏற்பட்டது.

இதனால் டிப்பர் வாகனத்தின் கண்ணாடிகள் சேதமடைந்தன. நகரப் பகுதியில் நின்ற பொலிஸார் உடனடியாகச் செயற்பட்டு, டிப்பரை இழுத்து வீதியோரத்தில் நிறுத்தி, போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர். (ஒ-4-9-159)

# மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,நவ 26

யாழ். குடாநாட்டில் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சுப வைபவங்கள் மற்றும் விநாயகர் விரதகாலம் தற்போது இடம்பெற்றுவருவதால், மரக்கறிப் பாவனையாளர்கள் அதிகரித்துள்ளனர். இந்த நிலையில் சகல மரக்கறி வகைகளும் ஒரு கிலோ 200 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன.

கத்தரிக்காய், பாகற்காய், பயிற்றங்காய் போன்ற மரக்கறிகளை சந்தைகளில் காணவில்லை. அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (ஒ-4-17)



# பாடசாலைக்கு அருகில் ஆபத்தாகவுள்ள குழி

கிளிநொச்சி,நவ.26

கிளிநொச்சி, சிவபாத கலையக பாடசாலைக்கு முன்பாக, பாலம் அமைப்பதற்கு வெட்டப்பட்டுள்ளகுழி ஆபத்தானதாக மாறியுள்ளது. நேற்று முன்தினம் மழை பெய்து கொண்டிருந்த போது ஆரம்பப் பிரிவு மாணவர்கள் இருவர் குழிக்குள் வீழ்ந்த நிலையில், ஏனைய மாணவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர், கரைச்சி பிரதேசசபையினரால் பாலம் அமைப்பதற்கு, பாடசாலைக்கு அருகில் உள்ள வீதியில் சுமார் நான்கு அல்லது ஐந்து அடி ஆழத்தில் குழி வெட்டப்பட்டது.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக குறித்த குழிக்குள் வெள்ளம் நிரம்பியுள்ளது. ஆபத்தான பகுதி என எந்தவிதமான எச்சரிக்கை சமிக்ஞையும் இல்லாத நிலையில், மாணவர்கள் அந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பில் கிராம அலுவலர் மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஒரு விபரீதம் ஏற்பட முன்னர், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-4-214)




தனக்கு வால் பிடிக்காத எல்லாரையும் பந்தாடுறதுதான் கனவு பாழாப்போன எம்.பியின்ர பொழுது போக்கு. ஆனாலும் அவரின்ர இஷ்டத்துக்கு எல்லாரையும் மாத்த ஏலாது எண்டு கனதரம் மேல்மட்டம் சொல்ல, வேற என்ன வழி இருக்கு எண்டு கனவு குருப் யோசிச்சிருக்கு. இடைப்பட்ட காலத்தில மாத்தினாத்தானே பிரச்சினை? வருசத் தொடக்கத்தில இருந்து வழமையான இடமாற்றம் எண்டு கதைவிட்டால் ஆரும் கேள்வி கேக்க ஏலாது தானே. அதால அந்த ரூட்டிலயே போவம் எண்டு தங்கட ஆட்டத்துக்கு ஆரெல்லாம் தடையாய் இருந்திச்சினமோ அந்த அதிகாரியளை வேற மாவட்டங்கள், மாகாணங்கள் எண்டு தூக்கியடிச்சிருக்கினம். வாற வருசத்தில இருந்து இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வரப்போகுது.

ஒரே அதிகாரி ஒரே இடத்தில தொடர்ந்து வேலை செய்ய சட்டம் இடம் குடுக்கேலதான். ஆனால், சட்டத்தை சாதகமாக வைச்சுக் கொண்டு, தங்கட பழிவாங்கிற வேலையைக் காட்டுறது நீதியில்லாத வேலை கண்டியளோ? அதோட ஒரேயடியாய் அனுபவமான அதிகாரியள் எல்லாரையும் இடமாற்றம் செய்யிறதும் நிர்வாக ரீதியாக கனக்கப் பிரச்சினைகளை கொண்டுவரும். கனக்க அபிவிருத்தித் திட்டங்களில தடங்கல்கள் வரும். புதிசா வாறவை அந்தத் திட்டங்களை விளங்கிக் கொள்ளவே காலம் பிடிக்கும். அதுக்குப் பிறகுதான் அவை அப்பிடியான திட்டங்களை நடைமுறைக்கும் கொண்டுவருவினம். அதுக்குள்ள காலம்போகும். கட்டம் கட்டமாய் அனுபவமான அதிகாரியளை மாத்துறதுக்கு இடம் இருந்தும், விடாப்பிடியாய் எல்லாரையும் மாத்தியே ஆகோணும் எண்டு கனவு பாழாப்போன எம்.பி ஒற்றைக்காலில நிண்டு தான் நினைச் சதைச் சாதிச்சுப் போட்டார்.

இப்பிடி அதிகாரியளை பந்தாடுறதில கனவு பாழான எம்.பி காட்டுற அக்கறையை எங்கட பிரச்சினையில காட்டுறார் இல்லையே எண்டு சனங்கள் கோபமாக கேக்குதுகள். எம்.பியா வரமுதல் ஆள், ஆரும் தடுக்கி விழுந்தால்கூட அங்க ஓடிப்போய் படமெடுத்து, பேஸ்புக்கில போட்டு படங்காட்டுவார். இப்ப ஆள் இலங்கையில தான் இருக்கிறாரோ இல்லையோ எண்டுகூடத் தெரியேலை எண்டு சனம் கதைக்குது. ஆரும் அமைச்சர்மார் வரேக்க மட்டும் அவையின்ர குடையைப் பிடிச்சுக் கொண்டு கனவு பாழானவரும் கூட வந்திடுவார். மற்றப்படி ஆளைக் காணுறதே அருமை எண்டுதான் சனத்தின்ர முடிவு. ஆள் இஞ்ச இல்லாட்டியும், தனக்கு எதிரான ஆக்களை இடமாத்துறது மாதிரியான திருக்கூத்துகளை மட்டும் விடவேயில்லை. பாழாப்போன கனவுக் காரருக்கு கச்சேரியில ஒரு எடுபிடி ஒப்பீஸர் இருக்கிறார். அவர் தான் ஆரெல்லாம் எம்.பிக்கு எதிர் எண்டு போட்டுக்குடுக்கிற எட்டப்பனாம். அந்த எட்டப்பன் குடுத்த லிஸ்டை வைச்சுத்தான், இந்த அதிகாரியளை இடம் மாத்தி இருக்காம். நீங்கள் காக்கா பிடிக்கிறதுக்கு எதுக்கு அடுத்தவையைப் போட்டுக் குடுக்கிறியள்? சனத்துக்கு நல்லது செய்ய நினைக்கிறவையை எதுக்கு இடம் மாத்திறியள்...?



- பட்சி

# பல்கலைக் கல்வி தாமதத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, நவ.26

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி தாமதப்படுத்தப்படாது இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மருத்துவ பட்டப் படிப்பை 22 வயதில் நிறைவுசெய்வது மற்றும் ஏனைய அடிப்படைப் பட்டப் படிப்புகளை 20 வயதில் பூர்த்தி செய்வது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியன ஏற்கனவே இது தொடர்பில் கவனம் செலுத்தி திட்டமிட்டபடி பரீட்சைகளை நடத்தி, மாணவர்கள் காலதாமதமின்றி பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படுகின்றனர் என்று அந்தச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவர்கள் உள்ளிட்ட தொழில் வல்லுநர்களிடமிருந்து வருமான வரி அறவிடுவதில் நல்லாட்சி அரசின் காலப்பகுதியில் காணப்பட்ட கொள்கைக்கு மாறாக மஹிந்த ராஜபக்ச யுகத்தின் வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் சார்பில் விசேட வைத்திய நிபுணர் அனுருத்த பாதெனிய கேட்டுக் கொண்டார்.

12 சதவீதமாகக் காணப்பட்ட வருமான வரி நல்லாட்சி அரசால் 24 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது என்றும், தொழில் வல்லுநர்கள், வர்த்தகர்களாக கருதப்பட்டு அந்த மட்டத்தில் வரி அறவிடப்படுகின்றது - என்றும் மருத்துவர் அனுருத்த பாதெனிய சுட்டிக்காட்டினார்.

இந்தப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் நடவடிக்கை முன்னெடுக்க, அதனுடன் தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடலொன்றை தயார்ப்படுத்த வேண்டும் என்று பிரதமர் இதன் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (எ-இ)



## வான் பாய்கின்றது உடையார்கட்டுக் குளம்

முல்லைத்தீவு, நவ.26

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய குளங்களில் ஒன்றான உடையார்கட்டுக்குளம் நேற்றுமுன்தினம் முதல் வான் பாய ஆரம்பித்துள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக உடையார்கட்டுக்குளம் நிரம்பி, வான் பாயத் தொடங்கியுள்ளது. அதிகரித்த மழை பெய்ததால், ஏ-35 பரந்தன் முல்லைத்தீவு வீதியில், மூங்கிலாறுப் பகுதியில் வீதியை மூடி, குளத்தின் மேலால் வெள்ளம் பாயும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-4-13)



## வெள்ளத்தில் மூழ்கியது தர்மபுரம் பொதுச்சந்தை

கிளிநொச்சி.நவ.26


கிளிநொச்சி - கரைச்சி பிரதேசசபைக்குட்பட்ட தர்மபுரம் பொதுச் சந்தை வெள்ளத்தில் மூழ்கியதால், வியாபாரிகளும், பொது மக்களும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு தடவையும் மழை பெய்யும்போது சந்தை இவ்வாறு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றது. சீரான வடிகாலின்மையால் சந்தையில் வெள்ளம் தேக்கமடைந்துள்ளது.

இதனால் வியாபார நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில், பல தடவைகள் கரைச்சி பிரதேசசபையின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும், அவர்கள் இதுவரை வெள்ளம் வழிந்தோடும் வகையில் சீரான வடிகாலமைப்பை ஏற்படுத்தவில்லை என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-4-214)

## 5 குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள்



யாழ்ப்பாணம், நவ.26

கொழும்புத்துறை பிரதேசத்தில் 5 குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அவை உடனடியாக சுகாதாரப் பிரிவினரால் அழிக்கப்பட்டன.

மாநகர சுகாதாரப் பிரிவினர் கடந்த வாரத்தில் இந்தப் பிரதேசத்தில் வீடு வீடாகச் சென்று நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன்போது 5 குடியிருப்புக்களில் பூச்சாடிகள் மற்றும் வெற்றுப் பொருள்களில் நுளம்புக் குடம்பிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. வெற்றுப் பொருள்களில் மழைநீர் தேங்கி அவற்றில் இருந்து நுளம்புக் குடம்பிகள் பெருகலாம்.

எனவே வெற்றுப் பொருள்களை சுற்றாடல்களில் இருந்து அகற்ற வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் கேட்டுள்ளனர். (ஓ-4-17)

## மாணவி உயிர்மாய்ப்பு

தவறான முடிவெடுத்து பாடசாலை மாணவி ஒருவர் உயிரை மாய்த்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், அரியாலைப் பிரதேசத்தில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.

செயன்முறைப் பரீட்சை தொடர்பாக பாடசாலைக்கு வருமாறு ஆசிரியரால் மாணவி அழைக்கப்பட்டிருந்தார். அதற்கான தயார்ப்படுத்தல்களையும் செய்துவிட்டு, குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக தொலைக்காட்சி பார்த்த பின்னரே, அவர் தவறான முடிவை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4)

## பொறுப்பற்று நடந்தால் மீண்டும் கட்டுப்பாடுகள்

*மருத்துவ நிபுணர் எச்சரிக்கை*

கொழும்பு, நவ.26

பொதுமக்கள் தொடர்ந்தும் கவனக்குறைவாகவும், பொறுப்பற்ற விதத்திலும் நடந்து கொண்டால் கொரோனா பரவல் மோசமடையும். அது நாட்டை மீண்டும் மூடுவதற்கு வழிவகுக்கும்.

இவ்வாறு தொற்றுநோய் நிபுணர் மருத்துவர் சமித்த கினிகே எச்சரித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தொற்றுத் தீவிரமடைந்தால் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க நேரிடலாம். மீண்டும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் நடந்துகொள்வது பொதுமக்களின் பொறுப்பாகும்.

இறப்பு மற்றும் தொற்று எண்ணிக்கையின் தற்போதைய அதிகரிப்புத் தொடர்ந்தால் அதிகாரிகள் மீண்டும் கட்டுப்பாடுகளை விதிக்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

அதிகாரிகள் தங்கள் பங்குக்கு தடுப்பூசி வழங்கலை மேற்கொண்டுள்ளார்கள். நிலைமைக்கு ஏற்ப புதிய சுகாதார வழிகாட்டல்களை அறிவிக்கின்றனர். ஆயினும் கொரோனாப் பரவலைத் தடுப்பது மக்களின் கையிலேயே உள்ளது -என்றார். (எ-இ)

## அத்தியாவசியப் பொருள்களுடன் 1,000 கொள்கலன்கள் தேக்கம்!

கொழும்பு, நவ.26

டொலர் தட்டுப்பாடு காரணமாக சுமார் ஆயிரம் கொள்கலன்களில் உருளைக்கிழங்கு, பருப்பு, வெங்காயம், சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்திலேயே அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார். அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை துறைமுகத்தில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தில் நிமல் சிறிபால டி சில்வா, பஸில் ராஜபக்ச, பந்துல குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில உள்ளிட்ட அமைச்சர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் உதய கம்மன்பில, எரிபொருள் கூட்டுத்தாபனம் நஷ்டத்தில் இயங்குகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

டொலர் பற்றாக்குறையைச் சமாளிக்க எதிர்வரும் காலங்களில் மாற்று வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று அந்தக் கூட்டத்தில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச கூறினார் எனவும் அறிய முடிகின்றது. (எ-இ)

# 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர்

கொழும்பு, நவ.26

**20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாவது அலகை (பூஸ்டர்) வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எதிர்வரும் தினங்களில் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகும். பூஸ்டர் தடுப்பூசி 60 வயதுக்கு மேற்பட்ட குடிமக்களுக்காக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

பூஸ்டர் அலகு ஏற்கனவே 3 லட்சத்து 80 ஆயிரத்து 213 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் சுகாதாரத் துறையினரும் அடங்குகின்றனர்.

தற்போது மொத்த சனத்தொகையில் 73 சதவீதத்தினருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் இந்த எண்ணிக்கையை 75 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுவரை சுமார் 1.1 மில்லியன் மாணவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

திருமணங்கள், திரையரங்குகள், உணவகங்கள், ஹோட்டல் வளாகங்கள், விழா ஏற்பாடுகள் போன்றவற்றை சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய மீண்டும் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், திறக்கப்படும் பகுதிகள் எந்த எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்படவுள்ளது.

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் சுகாதார நடைமுறைகளில் முழுக் கவனம் செலுத்த வேண்டும். இல்லை என்றால் மீண்டும் இது தொடர்பாக சில கடுமையான முடிவுகளை எடுக்க நேரிடும்- என்றார். (எ-இ)

## தரம் குறைந்த எரிவாயு விற்பனையில் இல்லை

### லிற்றோ நிறுவனம் மறுப்பு

கொழும்பு,நவ.26

தரம் குறைந்த எரிவாயு கொள்கலன்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன என்று சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என்று லிற்றோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் எரிவாயு தொடர்பில் சர்வதேச சுயாதீன ஆய்வுகூட அறிக்கை பெற்றுக்கொள்ளப்படுகின்றது. உள்நாட்டிலும் ஆய்வுகூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. திரவ பெற்றோலிய வாயு உள்ளடக்கத்தில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை.

எரிவாயு கொள்கலன் விபத்துக்களில் அநேகமானவை எரிவாயு ஹோஸ் (குழாய்) மற்றும் எரிவாயு அடுப்பு என்பனவற்றின் குறைபாடுகளால் நிகழ்ந்துள்ளன. எரிவாயுவின் தரக்குறைவால் விபத்துக்கள் இடம்பெற்றதில்லை.

எரிவாயுக் கொள்கலன் அதில் அடைக்கப்படும் எரிவாயுவின் அளவிலும், ஆறு மடங்கு அழுத்தத்தைத் தாங்கிக் கொள்ளக்கூடிய இயலுமை கொண்டது. எனவே சந்தையில் விநியோகிக்கப்படும் எரிவாயு கொள்கலன்களால் ஆபத்து ஏற்படும் என்ற தகவல் உண்மைக்குப் புறம்பானது என்றும் லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஒ-4)

## சிவபெருமான் கனவில் வந்து காணியைக் காட்டிய அதிசயம்!

யாழ்ப்பாணம், நவ.26

சிவபெருமான் கனவில் தோன்றி காணி ஒன்றை அடையாளம் காட்டினார் என்று கூறி காணிக்கு உரிமை கோரும் விசித்திர சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயம் ஒன்றின் பரம்பரை தர்மகார்த்தாவால் தாக்கல் செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் நீதிமன்றம் ஒன்றில் நடக்கும் வழக்கொன்றிலேயே பிரதிவாதிகளால் இந்தத் தகவல் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் உள்ள காணி ஒன்றில் பொதுமக்கள் நீண்டகாலமாகக் குடியிருக்கிறார்கள். அந்தக் காணி தங்களுடையது என்று கூறி ஆலயத் தர்மகார்த்தா ஒருவரால் மன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்தக் காணியில் குடியிருப்பவர்களான பிரதிவாதிகளால் தெரிவிக்கப்பட்ட விளக்கத்தின்படி, 25 முதல் 30 ஆண்டுகளாக அந்தக் காணிகளில் குடியிருக்கின்றோம். அண்மையில் ஒருவர் வந்து அந்தக் காணிகள் தன்னுடையது என்று கூறினார். நாம் நீண்டகாலமாக அங்கு குடியிருப்பதைச் சுட்டிக்காட்டினோம். அவர் அதை ஏற்கவில்லை.

சிவபெருமான் அண்மையில் கனவில் வந்து இந்தக் காணிகளை அடையாளம் காட்டினார் என்றும், காணி உறுதி இருக்கும் இடத்தையும் அடையாளம் காட்டினார் என்றும் அவர் கூறினார்.

சிவபெருமான் காட்டிய இடத்தில் எடுத்த உறுதிப் பத்திரங்களைக் காட்டுங்கள் என்று கேட்டோம். அவற்றை எமக்குக் காட்ட மறுத்த அவர், உரிய இடத்தில் காட்டுவேன் என்று கூறினார். என்று தெரிவித்துள்ளனர். (எ-இ)

## இலங்கைப் பெண்களில் ஐந்தில் ஒருவருக்கு வன்முறை



கொழும்பு, நவ.26

இலங்கைப் பெண்களில் ஐந்தில் ஒருவர் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார் என்று தேசிய கணக்கெடுப்பொன்றில் தெரியவந்துள்ளது.

பெண்களின் நல்வாழ்வு கணக்கெடுப்பு என்ற அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, 20.4 வீதமான பெண்கள் தங்கள் நெருங்கிய துணையால் வன்முறைக்கு உள்ளாகியுள்ளனர்.

ஐந்தில் ஒரு பெண் நெருங்கிய துணையால் உடல் அல்லது பாலியல் வன்முறையை எதிர்கொண்டுள்ளார்.

பாலியல் வன்முறையை அனுபவித்த பெண்களில் அரைவாசிப் பேர் (49.3%) முறையான சட்ட உதவியை எங்கும் நாடவில்லை.

அதேவேளை நெருக்கமான துணையால் உடல் அல்லது பாலியல் வன்முறையை எதிர்கொண்ட பெண்களில் மூன்றில் ஒரு பகுதியினர் (35.7%) தமது உயிரைப் போக்கிக்கொள்ள முயற்சித்துள்ளனர் என்றும் அந்த ஆய்வு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ-4)

## வர்த்தமானி வெளியீடு முறைகேடுகள் இல்லை

கொழும்பு, நவ.26

5 கிருமிநாசினிகள் மீதான தடை நீக்கம் தொடர்பிலான வர்த்தமானி பீடைக்கொல்லி தொழிநுட்பக்குழு மற்றும் ஆலோசனை சபை, அமைச்சரவை ஆகியவற்றின் ஆலோசனைக்கு அமையவே வெளியிடப்பட்டுள்ளது. இதில் எந்தவித முறைகேடுகளும் இல்லை என்று பீடைக்கொல்லி பதிவாளர் கலாநிதி ஜே.ஏ சுமித் தெரிவித்துள்ளார்.

க்ளைபோசெட் உள்ளிட்ட பீடைக்கொல்லிகள் இறப்பர் மற்றும் தேயிலைப் பயிர்ச்செய்கைகளுக்கு பாவிப்பது தடை செய்யப்பட்டது. அத்தடை 2018 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் நீக்கப்பட்டது.

அதன் பிரகாரமே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-4)

# உள்நாட்டு எரிவாயுக்களின் இரசாயன வீதம் மாற்றம்

### ஆபத்து இருப்பதாக எச்சரிக்கை

கொழும்பு,நவ.26

உள்நாட்டு எரிவாயுக்களின் இரசாயன வீதத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்தன எச்சரித்துள்ளார்.

இலங்கை வீடுகளில் எரிவாயு வைத்திருப்பது வெடிகுண்டு இருப்பது போன்று ஆபத்தான விடயமாகியுள்ளது.

உள்நாட்டு எரிவாயுக்களின் இரசாயன வீதத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் அண்மைய நாள்களாக பல இடங்களில் எரிவாயு சிலிண்டர்கள் அதிகளவில் வெடிப்பதற்கு இந்த இரசாயன மாற்றமே காரணம்.


எரிவாயு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு பிரதான நிறுவனங்கள் இணைந்து இந்த இரசாயன மாற்றத்தைத் செய்துள்ளன.

இது தொடர்பாக பொறுப்பான அமைச்சர்களிடம் கூறிய போதிலும் அவர்கள் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.

இது ஒரு மோசடியான செயல். கொலைக்கு உதவும் வகையிலான செயல் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

# காய்ச்சல் பல நோய்களுக்கான அறிகுறி பொருத்தமான பரிசோதனை அவசியம்

*சுகாதாரப் பிரிவினர் ஆலோசனை*



**யாழ்ப்பாணம், நவ.26**

**காய்ச்சல் பல தொற்று நோய்களுக்கு பொதுவான அறிகுறியாக இருப்பதால், நோய்க்கிருமியைக்கண்டறிய பொருத்தமான பரிசோதனையை காலதாமதமின்றி மேற்கொள்வது அவசியம் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவமனை அதிகாரி பணிமனையினர் அறிவுறுத்தியுள்ளனர்.**

கொரோனாத் தொற்றாளர்கள் பரவலாக அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில், டெங்குக் காய்ச்சல் மற்றும் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இரு நோயாளர்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, அடையாளம் காணப்பட்டவர் ஆரம்பத்தில் தனக்கு ஏற்பட்ட காய்ச்சலை கொரோனாத் தொற்றுக்குரியது எனக் கருதி, சிகிச்சைக்குச் செல்லாது வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

நோய் தீவிரமடைந்து மயக்கமுற்ற நிலையில் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று, தற்போது அவர் குணமடைந்து வருகின்றார்.

எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் உரிய நேரத்தில் சிகிச்சைக்குச் செல்லாவிடில் ஈரல், சிறுநீரகங்கள் போன்ற முக்கிய உறுப்புக்கள் செயல் இழந்து, மரணமடையும் வாய்ப்புக்கள் உள்ளன.

குறிப்பாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், கால்நடைகளை வளர்ப்பவர்கள் இது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருப்பது அவசியம்.

காய்ச்சல் கொரோனாத் தொற்றுக்கு மட்டுமல்லாமல், டெங்குக் காய்ச்சல், எலிக்காய்ச்சல், உண்ணிக் காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல் போன்றவற்றுக்கான அறிகுறியாகவும் இருக்கலாம்.

எனவே பொருத்தமான சிகிச்சையைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-4-159)



## மீனவர்களுக்கான நஷ்டஈடு வடபகுதி புறக்கணிப்பு

மன்னார், நவ.26

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மீனவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளபோதும், மன்னார் உட்பட வடக்கு மாகாண மீனவர்களுக்கு எந்தவிதக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என்று மன்னார் மாவட்ட மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், காற்றுக் காலங்களில் எமது தொழில் நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. இதனால் சிறு மீனவர்களும், வாடிகளில் வேலை செய்யும் பெண் தலைமைத்துவக் குடும்பத்தினரும் பாதிப்படைந்துள்ளனர்.

தலைமன்னார், பேசாலை, விடத்தல் தீவு, முத்தரிப்புத்துறை, கொக்குப் படையான், முள்ளிக்குளம் போன்ற பகுதிகளில் உள்ள மீனவக் குடும்பங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

புரவி புயல் மற்றும் தற்போது பெய்து வரும் மழை உள்ளிட்ட இயற்கைப் பாதிப்புக்களால் மீனவர்கள் தொழில் வருமானங்களை இழந்துள்ளனர்.

அரச தரப்பினரால் நிவாரணத்துக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட போதும், எமக்கான நிவாரணங்கள் இன்னும் வழங்கப்படவில்லை.

ஆனால், தென்பகுதி மீனவர்கள் பாதிக்கப்பட்டு சில மாதங்களிலே அவர்களுக்கான நஷ்டஈடு வழங்கப்படுகின்றது. மன்னார் உட்பட வடபகுதி மீனவர்களுக்கு எந்தவொரு இழப்பீடும் வழங்கப்படவில்லை. -என்றனர். (ஓ-4-213)



## அறநெறிப் பாடசாலை ஆரம்பம்

முல்லைத்தீவு, நவ. 26

முல்லைத்தீவு, பழம்பாசி 17ஆம்கட்டை கிராமத்தில் அறநெறிப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தங்கராசா நிசாந்தன் தலைமையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை 21ஆம்திகதி இந்தப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், தாய்த் தமிழ் பேரவையின் தலைவர் சி.நாகேந்திரராசா, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சி.மோகனராசா மற்றும் தண்டுவான் வித்தியாலயத்தின் அதிபர் கு.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். (ஓ-ரி1-13)



## சட்டவிரோத நடவடிக்கை மூவர் கைது


முல்லைத்தீவு, நவ. 26

முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்பகுதியில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட இருவர் மற்றும் சட்டவிரோத மதுபானம் தயாரித்த ஒருவர் என மூவர் கைது செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்பரப்பில் சட்டவிரோத வெடிபொருள் பாவித்து மீன்பிடியில் ஈடுபட்ட புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த இரு மீனவர்களை கடற்படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்து, முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை கொக்கிளாய் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் தயாரித்த இடத்தை சிறப்பு அதிரடிப் படையினர் முற்றுகையிட்டு அதே பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதன்போது 256 லீற்றர் கசிப்பும், 360 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-19)



முல்லைத்தீவு தண்ணீரூற்று இலங்கை திருச்சபைத் தமிழ்க் கலவன் பாடசாலையில் முதலுதவிச் சிகிச்சை அறை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**இலங்கை விமானப்படையின் சேவா வனிதா பிரிவினரால், பதினொரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி உதவியில் முதலுதவிச் சிகிச்சை அறை மற்றும் புனரமைக்கப்பட்ட கட்டடம் என்பன கடந்த திங்கட்கிழமை மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன. (ஓ-ரி1-19)**

## பாடசாலைச் சூழலில் வெள்ளம் மாணவர்களுக்கு தொற்று அபாயம்

கிளிநொச்சி, நவ. 26

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை காரணமாக பாடசாலைகளில் வெள்ளம் வடிந்தோட முடியாத நிலையில் காணப்படுவதால், தொற்று நோய்கள் ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.



தற்போது பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருப்பதன் காரணமாக மாணவர்கள் மழைக்கு மத்தியிலும் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

பாடசாலைகளின் சூழலில் பெருமளவு மழை வெள்ளம் தேங்கி நிற்கும் நிலையில், மாவட்டத்தில் சுகாதாரத் தரப்பினரால் குளங்கள், ஏனைய நீர் நிலைகள், வெள்ளத்தில் மாணவர்கள் விளையாடக் கூடாது என்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மழை வெள்ளத்தில் விளையாடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இதேவேளை, பாடசாலைகளில் பெற்றோர், பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து பாடசாலைகளில் தேங்கி உள்ள வெள்ளத்தை வடிந்தோட வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ய-13)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## யுகக்கனவைத் தீர்க்க வந்த தீரன்!

ஒரு மன்னனுக்கு தான் சரியான மக்கள் தலைவனா? என்ற சந்தேகம் வந்துவிட்டது. அதனால் தன்னுடைய குருவிடம் சென்றான். சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டினான். குருவும் அவனிடம் பஞ்சு, கற்கண்டு, களிமண் என்பவற்றைக் கொண்டுவரச் சொன்னார். அவனும் அவற்றைக் கொண்டுவந்து குருவிடம் கொடுத்தான். அவற்றை ஒவ்வொன்றாக தண்ணீரில் இட்டார் குரு. பின்னர் மன்னனிடம் "மகனே, இந்த மூன்று பொருள்களும் தண்ணீரில் இடப்பட்டன. பஞ்சு முழுத்தண்ணீரையும் தானே உறிஞ்சிக் கொண்டு, தண்ணீரை இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிட்டது. களிமண்ணோ தான் மறைந்து போய், தண்ணீரை அசுத்தப்படுத்திவிட்டது. ஆனால் இந்தக் கற்கண்டு தான் மறைந்தாலும் சாதாரண தண்ணீரை இனிப்பாக்கி, எல்லோரும் விரும்பும் பொருளாக மாற்றிவிட்டது. அதுபோலவே நல்ல தலைவன் என்பவன் தன்னைப் பற்றிச் சிந்திக்காது, தன்னை நம்பிய மக்களின் உயர்வுக்காகப் பாடுபடுபவனாக இருப்பான்" என்று கூறி, மன்னனின் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தார்.

இந்தக் கதையில் வருவது போன்று, தன்னை விடவும் மேலாக தன்னினத்தை நேசிக்கும் ஒரு தலைவனின் வருகைக்காக தமிழினம் ஏங்கிக்கொண்டிருந்தது. பல யுகங்களாக நீண்டுகொண்டிருந்த அந்த ஏக்கம், 1954 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி இணுவில் மைக்லியோட் மருத்துவமனையில் நிகழ்ந்த பிரசவமொன்றோடு தீர்ந்துபோனது. வல்வெட்டித்துறையின் வேலுப்பிள்ளை - பார்வதியம்மா தம்பதியரின் மகனாகப் பிறப்பெடுத்த பெருந்தலைவனின் வருகை, தாழ்வுற்று,வறுமை விஞ்சி, விடுதலை தறிகெட்டு பாழ்பட்டு நின்ற தமிழினத்துக்குப் புதுக் குருதி பாய்ச்சியது. ஒரு கைத்துப்பாக்கியோடு அதிகாரத்தை நோக்கி எதிர்ப்பை வெளிப்படுத்திய கரிகாலன் தலைமையில், தமிழ் இளையோர் ஆயிரக்கணக்கில் திரண்டனர்.

அடிமைச் சங்கிலியால் பல தசாப்தங்களாகப் பிணைக்கப்பட்டிருந்த எம்மினம், போரிடுவதற்கான எந்த அடிப்படைகளையும் கொண்டிருக்காத சூழலை தலைவரின் வருகை தலைகீழாக மாற்றியது. முப்படைகளையும் கொண்ட நிழல் அரசொன்று எமக்கென்று உருவானது. தலைவர் தொட்டதெல்லாம் பொன்னானது. கண் பட்ட இடமெல்லாம் பகையழிந்தது. எதிரிகளே அவரது ஆற்றலையும், ஆளுமையையும், ஒழுக்கத்தையும் இன்றளவும் வியந்து பேசுமளவுக்கு ஒரு தலைவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு உதாரண புருஷரானார். அந்தப் புலி கொண்ட புகழின் வாசனை கழுதைகளுக்குத் தெரிவதில்லை. ஏனெனில் கழுதைகள் ஒருபோதும் புலியாகப் போவதுமில்லை, புகழ்பெறப்போவதுமில்லை. அதனால்தான் எதிரியே வியக்கும் ஒரு தலைவனை 'போதைப்பொருள் கடத்தியவர்' என்று வாய்க்கு வந்ததை எல்லாம் சொல்லி, தங்கள் வக்கிரத்தை அப்படியான கழுதைகள் தீர்த்துக் கொள்கின்றன.

ஒருவேளை தேசியத்தலைவரின் வருகை நிகழ்ந்திராவிட்டால், இன்று இலங்கையில் தமிழினத்தின் இருப்பே இல்லாமற் போயிருக்கும். எங்கும் விகாரைகள் சூழ்ந்திருக்க, 'ஒரே நாடு, ஒரே மதம், ஒரேமொழி, ஒரே இனம்' என்பதே இலங்கையின் நிலையாக இருந்திருக்கும். ஆனால், தமிழர் என்றொரு இனமுண்டு, அவர்களுக்குள்ளும் போர்க் குணமுண்டு என நிரூபித்து, எம்மினத்துக்கான மதிப்பை உலக அரங்கில் நிமிர்த்த, தன் வாழ்வையே அர்ப்பணித்தவனின் அகவை நாளில், வாழ்த்துவதைத் தவிர வேறென்ன கைமாறு செய்யமுடியும் எங்களின் பெருஞ்சூரியனுக்கு...?




# வடக்குக் கடலில் தொடரும் தமிழக மீனவர் அத்துமீறல்!

### மீன்பிடியை கைவிட்ட இலங்கை மீனவர்கள்

**யாழ்ப்பாணம், நவ.26**

**இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி இந்திய இழுவைப் படகுகள் நுழைந்தமையால், இலங்கை மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாது திரும்பி வந்துள்ளனர்.**

இந்திய மீனவர்கள் இனி மேல் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி, மீன்பிடியில் ஈடுபடமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று இரவு மீண்டும் அவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று இலங்கை மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். மாதகல் கடற்கரையில் இருந்து சுமார் 4 கிலோமீற்றர் தூரத்தில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டனர் என்றும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடாது கரைக்குத் திரும்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-27)

# ஊடகவியலாளர்கள் மீது கிண்ணியாவில் தாக்குதல்

### சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

திருகோணமலை, நவ.26

திருகோணமலை, கிண்ணியா படகு விபத்துத் தொடர்பாக செய்திகளைச் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு, சுதந்திர ஊடக இயக்கம் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை கிண்ணியாவில் நடந்த படகு விபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர். அந்தச் சம்பவம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற மூன்று ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களான அப்துல் சலாம், முஹம்மட் யாசீம் மற்றும் எப்.முபாறக் ஆகியோர் அங்கிருந்த குழு ஒன்றால் தாக்கப்பட்டு, நேர்காணல் மற்றும் தகவல்கள் அடங்கிய அவர்களின் கையடக்கத் தொலைபேசிகளும் அந்தக் குழுவால் பறிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாகக் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

FMM
நிදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

கிண்ணியா படகு விபத்து மிகப் பெரும் சோகம் என்றபோதும், உண்மைகளைச் சரியான நேரத்தில் அனைத்து விவரங்களுடனும் தெரிவிக்கும் ஊடக உரிமையை எந்தத் தரப்பினரும் கேள்விக்குட்படுத்த முடியாது, தடுக்க முடியாது. ஊடவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு, அதற்குக் காரணமானவர்களை சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.(எ-இ)

நவம்பர் 2021
வடமாகாண மரநடுகை மாதம்



"குடி மக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டு பண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்."
- வங்காரி மாதாய்





# முல்லைத்தீவு மருத்துவமனையில் இருதய சிகிச்சைப் பிரிவு திறப்பு

**முல்லைத்தீவு, நவ.26**

**முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில், இருதய சிகிச்சைப் பிரிவு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.**

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளரும் சட்ட மருத்துவ அதிகாரியுமான க.வாசுதேவ தலைமையில், யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் இருதய சிகிச்சை நிபுணர் மருத்துவர் பு.லக்ஸ்மன் இருதய சிகிச்சைப் பிரிவினை திறந்து வைத்தார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இருதய சிகிச்சைப் பிரிவுகள் செயற்பட்டாலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக நீண்ட காலமாக இருதய சிகிச்சைப் பிரிவு செயற்படவில்லை.

தற்போது புதிய பிரிவு திறக்கப்பட்டுள்ளதால், இருதய சிகிச்சைக்காக மிக நீண்டதூரம் பயணம் செய்து சிகிச்சைகளைப் பெற்று வந்தவர்களின் சிரமங்கள் நீக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மு.உமாசங்கர் வவுனியா மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜே. நிலக்சன் மற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டனர். (ஒ-4-19)

# இலவச பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், நவ.26

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தி பெறாத மாணவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

திறன்கள் அபிவிருத்தி தொழிற்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, எதிர்வரும் ஜனவரி மாதம் இந்தப் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறிகள், மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம், காரைநகர், சுன்னாகம், கைதடி, பண்டத்தரிப்பு , வல்வெட்டித்துறை ஆகிய நிலையங்களில் 3, 6, 12 ,18 ஆகிய மாத காலப் பகுதிகளில் நடைபெறும் என்று தெரிவித்துள்ள னர்.

அத்துடன், பயிற்சிக் காலத்துக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களுக்குச் சென்று தமக்குப் பொருத்தமான பயிற்சி நெறிகளைத் தெரிவு செய்யலாம் - என்றும் அறிவித்துள்ளனர். (ஒ-ரி1-9)

# ப.தெ.அ.கூ.ச. சமாசத்துக்கு புதிய தலைவர்

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய தலைவராக, கோண்டாவில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செ.செல்வராசா தெரிவு செய்யப்பட்டார்.

சமாசத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் புதிய பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்பட்டது. இதன்போது தலைவராக செ.செல்வராசா, உப தலைவராக வ. தெய்வேந்திரம் (சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம்), செயலாளராக ஆ.சாந்தகுமார் (கொடிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்), பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக மா. ஜெயம், பா.விஜயகுலசிங்கம், சி.சிவகுமார், இ.பிரதீபன், தே.கிறிஸ்துராசா, சி.பாலையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-4-17)

# நல்லாட்சி அரசின் தவறை ராஜபக்ச அரசும் செய்யுமா?

## *நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி. கேள்வி*

கொழும்பு, நவ.26

மாகாண சபைத் தேர்தலை கடந்த நல்லாட்சி அரசு நடத்தவில்லை. அந்த அரசுக்கு முண்டு கொடுத்த நாமும் அதை வலியுறுத்தவில்லை என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக் கொள்கின்றேன். அது எங்கள் பக்கம் உள்ள தவறு என்பதையும் உங்கள் முன்பாக ஏற்றுக்கொள்கின்றேன். இவ்வாறு நாடாளுமன்றத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்னிலையில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைநுட்ப, மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அரசாங்க சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், தேர்தல் திருத்தம் வரும்வரை அல்லது அரசமைப்பில் ஒரு திருத்தம் வரும்வரை மாகாண சபைகளுக்கான தேர்தல் எதுவும் நடத்தப்படாது எனத் தெரிவித்தார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன.

மாகாணசபைத் தேர்தலை கடந்த அரசு நடத்தவில்லை. அந்த அரசுக்கு முண்டு கொடுத்த நாமும் அதனை வலியுறுத்தவில்லை என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக் கொள்கின்றேன். அது எங்கள் பக்கம் உள்ள தவறு என்பதையும் உங்கள் முன்பாக ஏற்றுக்கொள்கின்றேன். அந்த அரசு விட்ட தவறை நீங்களும் விடப் போகின்றீர்களா? கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்று, இரு வருடங்கள் முடிந்துவிட்டன. பிரதமரின் காலம் ஒரு வருடம் முடிந்துவிட்டது. நாங்கள் விட்ட தவறை நீங்களும் செய்வதென்றால் எங்களைப் போன்றுதானே நீங்களும் இருக்கின்றீர்கள். நீங்கள் இந்த மாகாண சபைத் தேர்தல்களை நடத்தலாம் தானே - என்றார். (எ-22)



யாழ்ப்பாணம் வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி ஊழியர் நலன்புரிச்சங்கம், வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட தமது அங்கத்தவர்களுக்கு உலர் உணவுப்பொருள்களை வழங்கியது. (ஒ-4-63)

# வெள்ளைக் கொடி கட்டி கிண்ணியாவில் அஞ்சலி

திருகோணமலை, நவ.26

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் நடந்த படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு நேற்று வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டு, அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிண்ணியாவில் பாடசாலைகள், கடைகள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு, வெள்ளை நிறக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. பிரதான வீதிகள், அரச திணைக்களங்கள், பள்ளிவாசல்கள், வீடுகள் என அனைத்து இடங்களிலும் வெள்ளைக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் நடந்த படகுப் பாதை விபத்தில், மாணவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# கிண்ணியா விபத்துக்கு த.தே.கூ. ஆழ்ந்த கவலை

கொழும்பு, நவ.26

திருகோணமலை குறிஞ்சாக்கேணி ஆற்றில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை பாடசாலை மாணவர்கள் 4பேர் உட்பட 6 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் இந்த நாட்டில் மிகப் பெரிய கவலையையும் அவலத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. பாடசாலை மாணவர்கள் உட்பட 20 க்கும் மேற்பட்டோரை பாதை என்கின்ற படகில் ஏற்றிக்கொண்டு பயணித்த வேளையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இது மிகவும் மோசமான , கவலை தரக்கூடிய சம்பவம். தமிழ், இஸ்லாமிய குழந்தைகள், சகோதரர்கள் இந்த விபத்தில் இறந்தமைக்கு நாம் எமது ஆழ்ந்த கவலையை இந்த சபையின் ஊடாகத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (எ-22)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தினரின் செயற்பாடுகள் காரணமாக மகிழ்ச்சி ஏற்படும். முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு உண்டு. வசதிவாய்ப்புக்கள் அதிகரிக்கும் நாள். வரவு திருப்தி தரும்.

**இடபம்:** நேர்த்தியாகப் பணிகளை செய்து முடித்து மகிழ்வீர்கள். அலைச்சல் ஏற்படும். உழைப்புக்கேற்ற நல்ல பலன் கிடைக்கும். சிறு சிறு பிரச்சினைகளை தவிர்த்து நிம்மதி அடைவீர்கள்.

**மிதுனம் :** அக்கம்பக்கத்தினரிடம் சுமுகமாக நடந்து கொண்டு நற்பெயர் பெறுவீர்கள். உங்களைவிட உயர்ந்தோர் நட்பு இன்று கிடைக்கும். மற்றவர்களுக்கு உதவுவீர்கள்.

**கடகம்:** உங்களது முயற்சியால் குடும்பத்தில் இருந்த சிரமங்கள் தீரும். குதூகல நிகழ்வு ஒன்றில் பங்கேற்பீர்கள். பல நாள் சந்தேகம் தீரும். விரும்பிய பொருளை வாங்குவீர்கள். அலைச்சல் அதிகமாக இருக்கும்.

**சிம்மம்:** மனதில் இதுவரை இருந்து வந்த இறுக்கமான நிலை மாறும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றமும், பதவி உயர்வும் கிடைக்கும். நின்றுபோன பணி ஒன்றை இன்று தொடருவீர்கள். நிம்மதியான நாள்.

**கன்னி:** உடன் பணிபுரிபவர்களுடன் சுமுகமாக நடந்து கொள்வீர்கள். புதிய நண்பர் ஒருவரால் நன்மை நிகழ்ந்து உங்களை மகிழ்விக்கும். இத்தனை நாள்களை விட இன்று அதிக வழிபாடு செய்வீர்கள்.

**துலாம்:** பணியாளர்கள் கடமை ஒன்றை முடித்து நிம்மதி அடைவீர்கள். முயற்சிசெய்து உங்களதுசுய தேவையை நிறைவு செய்து கொள்வீர்கள். தொழில் அல்லது பணியில் இரகசியம் ஒன்று தெரிய வரும்.


**விருச்சிகம்:** உடன் பிறந்தவர்களுடன் உல்லாசமாகப் பொழுதுபோகும். நீங்கள் முன்பு செய்த தவறு ஒன்று இன்று மன்னிக்கப்படும். குடும்பத்தில் ஒருவரின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றுவீர்கள்..

**தனுசு:** கடன் தொல்லைகளில் இருந்து ஓரளவு விடுபடுவீர்கள். எதற்காகவும் குறுக்கு வழிகளை நாடவேண்டாம். செயல்களில் மிகுந்த கவனமும், நேர்மையும் தேவை. மற்றவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பீர்கள்.

**மகரம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதுமைகள் செய்வீர்கள். சிரமத்தைத் தவிர்க்க வழியைக் கண்டறிந்து நிம்மதி பெறுவீர்கள். அழகுணர்ச்சி அதிக

**கும்பம்:** வருமானம் உயரும். வருங்காலத் திட்டங்கள் நிறைவேறும். பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரும். மற்றவரால் மதிக்கப்படுவீர்கள். சகோதர, சகோதரிகளுடன் இருந்த மனத்தாங்கல் நீங்கும்.

**மீனம்:** உங்களை மற்றவர்கள் புதிர் போல் பார்ப்பார்கள். சிறு சிறு செலவுகள் வரலாம். பகைவர்கள் மனம் மாறுவர். குழந்தைகளிடம் இருந்து நற்செய்தி வரும். நல்ல நட்பு கிடைக்கும்.



## இலவச ஆன்மிக சுற்றுலாவில் வேளாங்கன்னி தேவாலயம்

புதுடில்லி, நவ.26

டெல்லி அரசின் இலவச ஆன்மிக சுற்றுலாவில் வேளாங்கன்னி தேவாலயம் சேர்க்கப்பட்டுள்ளது.

டெல்லி அரசு, மூத்த குடிமக்களுக்கான இலவச ஆன்மிக சுற்றுலா திட்டத்தை கடந்த 2018ஆம் ஆண்டு தொடங்கியது. இதன்படி, டெல்லியில் வசிக்கும் 60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மூத்த குடிமக்கள், பூரி, இராமேஸ்வரம், சீரடி, மதுரா, ஹரித்துவார், திருப்பதி உள்ளிட்ட 13 ஆன்மிகத் தலங்களுக்கு இலவசமாக அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இந்த சுற்றுலாத் திட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள வேளாங்கன்னி தேவாலயமும் சேர்க்கப்பட்டுள்ளது என டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார். கிறிஸ்தவ சகோதரர்களின் வேண்டுகோளை ஏற்று இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார். (ச)

### தமிழகத்தை உலுக்கிய

# ராம்குமார் வழக்கில் திடீர் திருப்பம்





**சென்னை, நவ.26**

**தமிழகத்தை உலுக்கிய ராம்குமார் - சுவாதி வழக்கில் ராம்குமார் சிறையிலேயே தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறப்பட்ட நிலையில், அவரது உடற்கூற்று பரிசோதனை மருத்துவர் மற்றும் சிறை மருத்துவர் ஆகியோர் நேற்றுமுன்தினம் வாக்குமூலம் அளித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.**

கடந்த 2016ஆம் ஆண்டு சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் மென்பொறியியலாளர் சுவாதி வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் ராம்குமார் என்பவர் கைது செய்யப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

பின் சிறைவளாகத்தில் ராம்குமார் மின்கம்பியைக் கடித்துத் தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறப்பட்ட நிலையில் அவரது தந்தை மாநில மனித உரிமை ஆணையத்தில் முறைப்பாடு அளித்தார்.

இந்த நிலையில் சிறைத்துறை மருத்துவரின் ஆவணத்தில் ராம்குமார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் போது வழியில் இறந்தார் என முதலில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தற்போது ராம்குமார் சிறையிலேயே இறந்துவிட்டார் என சிறைத்துறை மருத்துவரின் ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராம்குமாரின் உடலில் 4 சிராய்ப்புக் காயங்கள் இருந்தன என ராயப்பேட்டை அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரி கூறியிருந்த நிலையில் அவரது உடலில் இருந்த காயங்கள் மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்டவை அல்ல. அவர் மருத்துவமனைக்கு வருவதற்கு பல மணி நேரம் முன்னரே உயிரிழந்திருக்க வாய்ப்புண்டு என்றும் பிரேத பரிசோதனை மருத்துவர் பால சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

இந்த நிலையில் ராம்குமார் இறப்பு தொடர்பில் அடுக்கடுக்கான சந்தேகங்கள் எழுந்த நிலையில் அடுத்த கட்ட விசாரணை அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச)

### சர்ச்சைக் கதாபாத்திரத்தில்

## மீண்டும் சமந்தா



சென்னை, நவ.26

தமிழகத்தில் கடும் எதிர்ப்புகளிடையே வெளியான வெப் தொடர் 'தி பேமிலி மேன் 2'. சமந்தாவின் அட்டகாசமான நடிப்பில் இந்தத் தொடர் கடந்த மே மாதம் வெளியானது. இந்த வெப் தொடரை இயக்குநர்கள் ராஜ் மற்றும் டி.கே ஆகியோர் இணைந்து இயக்கியுள்ளனர்.

இந்த வெப் தொடரில் இலங்[illegible]மிழ் பெண்ணாக உள்ள சம[illegible]வை தீவிரவாதியாகக் காட்டியுள்[illegible]

இந்த வெப் தொடரில் சம[illegible]த்தது சர்ச்சையை ஏற்படுத்[illegible]

இதையடுத்து தனது சொ[illegible]க்கையில் ஏற்பட்ட பிரச்சி[illegible] சினிமாவில் நடிப்பாரா என்[illegible] எழுந்த நிலையில் தற்பே[illegible]டும் நடிக்க களமிறங்கி[illegible]

இந்த நிலையில் 'பேமிலி[illegible] இய[illegible]களின் புதிய [illegible]லும் [illegible]தா நடிக்கவுள்[illegible] தக[illegible] வெளியாகியுள்ள[illegible]



# கரூர் மாணவி விவகாரம்; ஆசிரியர் உயிர்மாய்ப்பு

புதுடில்லி, நவ.26

கரூர் மாணவி இறப்புடன் தன்னை தொடர்புபடுத்தியதை தாங்க முடியாது துயர முடிவை டயரியில் எழுதி வைத்து விட்டு பாடசாலை ஆசிரியர் ஒருவர் உயிரைமாய்த்துக் கொண்டுள்ளார்.

கரூர் பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு தூக்குப்போட்டு உயிர்மாய்த்துக் கொண்டார்.

அந்த மாணவி சாவதற்கு முன்பு நான் பாலியல் தொல்லை காரணமாக தற்கொலை செய்கிறேன். பாலியல் தொல்லையால் சாகும் கடைசிப் பெண் நானாக இருக்கணும் எனத் தெரிவித்து உயிர் மாய்த்துக் கொண்டிருந்தார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வரும் நிலையில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்த நிலையில் அந்த மாணவி படித்த பள்ளியில் உள்ள கணித ஆசிரியர் திடீரென நேற்று முன்தினம் உயிர் மாய்த்துக் கொண்டுள்ளார்.

இந்த சம்பவம் துறையூர் மற்றும் கரூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கைதுக்கு பயந்து தற்கொலை செய்திருக்கலாம் எனக் கூறப்பட்டது.

இந்த நிலையில் சம்பவ இடத்தில் இருந்து ஒரு டயரியை பொலிஸார் கைப்பற்றினர்.

அதில், மாணவியின் தற்கொலைக்கு நான் தான் காரணம் என மாணவர்கள் சந்தேகிக்கின்றனர். இதனால் மனம் உடைந்து விட்டது என எழுதி வைத்து விட்டு உயிர்மாய்த்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# சைவத்தின் காவலர்

# நாவலர் பெருமான்



இராசையா ஸ்ரீதரன்

**நாளை சனிக்கிழமை நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

யாழ்ப்பாணம் நல்லூரில் அவதாரம் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஈழத்திருநாட்டில் சைவம் குன்றிய காலத்திலே அதை வளர்த்தெடுக்க அரும்பாடுபட்ட ஒரு மகானாவார்.

இவருடைய குரு பூசை நன்னாள் நாளை சனிக்கிழமையாகும்.

சைவத்தின் காவலராகத் திகழ்ந்த நாவலர் பெருமான் கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியருக்கு 1822 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி அவிட்ட நட்சத்திரம் சிங்க லக்கினத்தில் அவதரித்தார்.

இளமையிலேயே கல்வியில் சிறந்து விளங்கிய இவர், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர் போன்ற தமிழ் இலக்கண விற்பன்னர்களிடம் பயின்று, தமிழ் அறிவை வளர்த்துக்கொண்டார்.

பீற்றர் பார்சிவல் துரைமகனாரிடம் ஆங்கில மொழியைக் கற்றுக்கொண்டதுடன், வடமொழியிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார்.

இவருடைய ஆற்றலைக் கண்ணுற்ற பாதிரியார் தமது கிறிஸ்தவ மதப்பள்ளியில் ஆசிரியராகக் கடமையாற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்படி ஆசிரியராகக் கல்வி கற்பித்து அரிய சேவையாற்றிய நாவலர், பிரசங்கம் செய்வதன்மூலம் சைவ சமயத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார்.

நாட்டு மக்களை நன்னெறியில் இட்டுச் செல்வதற்கு இரவு பகல் பாராது கல்வி புகட்டிய இவரது நாவன்மையைக் கண்ட இந்தியாவிலுள்ள திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

இலங்கை ஒரு புனித புண்ணிய பூமி என்று வர்ணித்த நாவலர் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோவிலில், சைவப் பிரசங்கம் செய்து மக்களை நல்வழிப்படுத்தி, ஈழத்திருநாட்டின் பெருமையை உணர்த்தினார்.

நாவலர் அச்சுக்கூடங்களை நிறுவி பல அரிய நூல்களை அச்சுவாகனமேற்றி அளப்பரிய பணியாற்றினார்.

கறையான் அரித்துவிடாதிருக்க வேண்டுமென்று பல்வேறு நூல்களையும் நல்ல தாளில் அச்சிட்டு அரிய பணி செய்த பெருமை இவரையே சாரும்.

இவருடைய அளவிடற்கரிய நல்ல பணிகளைக் கண்ணுற்ற செந்திநாதஐயர் "தேவாரம் யான் சொலக் கேட்டு மகிழ்ந்து சிரத்தையுடன் பூவாதி கொண்டு புரிசிவ பூசை பொலிவழகும் பாவாணர் மெச்சச் செயும் பிரசங்கமும் பார்த்தினி நான் நாவார வாழ்த்திடும் நாளுமுண்டோ நல்லை நாவலனே!"

என்று பாடியிருக்கின்றார்.

பாலர்பாடம் , சைவவினாவிடை, இலக்கணச்சுருக்கம், சிதம்பர மான்மியம், கந்தபுராணவசனம், பெரியபுராண வசனம், ஆலய தரிசன விதி, யாழ்ப்பாணச் சமயநிலை, திருவிளையாடற்புராணம் ஆகிய நூல்கள் இவர் பதிப்பித்த நல்ல நூல்களாகும்.

அத்துடன் ஆத்திசூடி, மூதுரை, கொன்றைவேந்தன், நல்வழி, திருமுருகாற்றுப்படை, கோயிற்புராணம் ஆகியவற்றுக்கு உரையும் எழுதி நற்பெயரைத் தட்டிக் கொண்டார்.

இது ஒருபுறமிருக்க தம்முடைய பெருமுயற்சியின் பயனாக "சைவ உதய பானு" என்று ஒரு பத்திரிகையும் வெளியீடு செய்தார்.

பின்னர் 1848 ஆம் ஆண்டில் யாழ். வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவினார்.

இந்தியாவிலே சிதம்பரத்திலும் பாடசாலை ஒன்றை அமைத்து நல்ல கல்விச் சேவையைச் செய்த பெருமையையும் பெற்றுக்கொண்டார்.

அதுமாத்திரமன்றி தம்முடைய அறப்பணி மேன்மையுற திருக்கேதீச்சரம், கீரிமலை, நகுலேஸ்வரம், திருக்கோணேச்சரம் முதலிய ஆலயங்களின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பி, பிரசங்கம் மூலம் சைவமும், தமிழும் வளரத் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணித்தார்.

1877 ஆம் ஆண்டில் மழை குறைந்ததால் நாட்டில் பஞ்சம் வந்தது. அப்போது கஞ்சித் தொட்டிக் கர்மம் என்று ஒன்றைத் தொடங்கி ஏறத்தாழ அரை வருட காலம் ஏழைகளுக்கு அன்னம் வழங்கி உதவினார். உயிர்ப்பலியை நிறுத்தி பசுமாடுகளையும், ஆடுகளையும் காப்பாற்றினார்.

யாழ்ப்பாணத்தில் கரையூர், பாஷையூர் போன்ற பகுதிகளிலே பேதி நோய் பரவி மக்கள் பலர் உயிராபத்தை எதிர்நோக்கிய வேளையில் அவர்களைக் காப்பாற்றினார்.

அன்னசத்திரம், மடம் என்பவற்றை ஸ்தாபித்து மக்கள் தங்குவதற்கு வழி சமைத்துக் கொடுத்தார். இவ்வாறு இலங்கைத் திருநாடு நல்ல நிலையை அடைவதற்கு பல்வேறு வழிகளிலும் அரும்பாடுபட்டார்.

நாட்டு மக்கள் நல்லபடி வாழ வேண்டும் என்று முற்று முழுதாகத் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த நாவலர் பெருமான் 1879 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி கார்த்திகை இரண்டாம் நாள் மகநட்சத்திரத்தில் இறைபதம் எய்தினார்.

ஐந்தாம் குரவர் என்று மதித்துப் போற்றப்பட்ட நாவலரின் குருபூசையை நாம் கட்டாயமாகக் கொண்டாட வேண்டும். அன்னாரின் வழிகாட்டலைப் பின்பற்றி நடப்பதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும்.

# ஆறுமுகநாவலரின் 142 ஆவது குருபூசை

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142 ஆவது குருபூசை நாளை சனிக்கிழமை நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம், அகில இலங்கை இந்துமாமன்றம், இந்து வித்தியா விருத்திச் சங்கம், இலங்கை சைவ நெறிக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சிறப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் கனடா சைவ சித்தாந்த பீட இயக்குநர் மருத்துவக் கலாநிதி, சிவத்திரு இ.லம்போதரன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தொடர்பான சிறப்புரையை நிகழ்த்துவார். நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் குருபூசை நிகழ்வு இடம்பெறும். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரையை வழங்குவதுடன், தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமாகிய செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வார். சைவப்புலவர் ஏ.அனுசாந்தனின் 'நாவலர் பெருமானின் வாக்கும் வாழ்வும்' என்ற தலைப்பிலான சிறப்புரையோடு, தெல்லிப்பழை, பன்னாலை, கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். காரைதீவு, சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்திலும் சிறப்பு நிகழ்வு இடம்பெறும். விசேடமாக முன்னெடுக்கப்படும் இந்த நிகழ்வுகளோடு வடக்கு- கிழக்கு மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசை நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும்.

(ஒ-4)

# கருத்தரங்கு

சாவகச்சேரி, நவ.26

தென்மராட்சிப் பிரதேச இந்துக் கோயில்களின் நிர்வாகிகளுக்கு, கருத்தரங்கு நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கு, தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

பிரதேச இந்து கலாசார அபிவிருத்தி அலுவலர் மகிந்தினி விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், வளவாளர்களாக சைவப்புலவர் க.கமலநாதன், யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி.ரமணராஜா மற்றும் யாழ். மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி அலுவலர் உதயபாலன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

(ஒ-ரி1-9)

# ஜேர்மனியத் தூதுவருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு

கொழும்பு, நவ.26

ஜேர்மனியத் தூதுவர் ஹோல்கர் ஸுபேர்ட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், கொழும்பில் உள்ள தூதரகத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்தனர்.



சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், மற்றும் ரெலோவின் ஊடகப்பேச்சாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள், ஐ.நா. 46/1 பிரேரணை, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படல், ஜி.எஸ்.பி. வரிச் சலுகைகள், காணி அபகரிப்பு, மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

தமிழர்கள் ஒருமித்த நிலைப்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்புக்களை வலியுறுத்துவது, அதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அவற்றின் முன்னேற்றம் தொடர்பில் கூட்டமைப்பினர் தூதுவருக்கு விளக்கமளித்தனர்.

இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணித்தியாலம் நடைபெற்றது என்று ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு,நவ.26

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பீடத்தால், சட்டத்துறையில் முனைவர்(கலாநிதி) பட்டம் மற்றும் சட்ட முதுதத்துவமாணி பட்டம் ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு கொழும்பு பல்கலைக்கழக சட்டப் பட்டப்பின் படிப்பு இணைப்பாளருடன் 0112502750 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும். (ஒ-4)



## படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு முல்லைத்தீவு பாடசாலையில் அஞ்சலி

முல்லைத்தீவு,நவ.26

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு, முல்லைத்தீவு கூழாமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

படகு விபத்தில் மாணவர்கள் உள்ளிட்ட ஆறு பேர் உயிரிழந்திருந்தனர்.

படகு விபத்தில் உயிரிழந்த மாணவர்களுக்கு, முல்லைத்தீவு - கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலை மாணவர்கள், சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி நிகழ்வில் மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினர் கலந்து கொண்டனர். (ஒ-4-19)

## பிள்ளையார் பெருங்கதை படிப்பு

யாழ்ப்பாணம், நவ.26

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் காலை 9 மணிக்கு விசேட அபிஷேகம் மற்றும் வழிபாடுகள் இடம் பெற்று பிள்ளையார் பெருங்கதை படிப்பு நடைபெறுகின்றது. (ச-17)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், நவ.26

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதை கடந்த 20ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. தினமும் காலை 8 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகளுடன் பிள்ளையார் கதை பாராயணம் பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு விநாயகர் அகவல் பாராயணம் செய்யப்படுகின்றது. (ச-17)


✦ ✦ ✦

யாழ்ப்பாணம், நவ.26

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் பெருங்கதைப் படிப்பு கடந்த 20ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

தினமும் காலை 8.30 மணிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகள் என்பன இடம் பெற்று பிள்ளையார் படிப்பும் இடம்பெறுகின்றது. (ச-17)

## தென்னாசிய கற்கைகள் ஆய்வேட்டின் ஆய்வுரை



யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் இருந்து வெளியாகும் தென்னாசியக் கற்கைகளுக்கான இலங்கை ஆய்வேட்டின் ஆய்வுரை, பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பத்திராதிபர் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில், "புகையிலை அரசி (1784 - 1844) யாழ்ப்பாணத்தில் ஓர் அடிமை முறைச் சமூகம் இருந்தமைக்கான நிலைப்பாடு" என்ற தலைப்பிலான ஆய்வு உரையை, கனடாவின் றொறண்டோ பல்கலைக்கழக கலாநிதி மார்க் ஈ. பாம்ஃபோர்த் நிகழ்த்தினார். ஆய்வுரையின் சுருக்க மொழிபெயர்ப்பு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருவரங்கனால் நிகழ்த்தப்பட்டது. (ஒ-4-125)

## ராஜபக்ச அரசின் துருப்புச்சீட்டு இனவாதமே!

### எதிரணி பிரதமகொறடா சபையில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 26

இந்த அரசுக்கு இனவாதத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. அரசின் துருப்புச்சீட்டு இனவாதம் மட்டுமே என்று எதிரணியின் பிரதம கொறடா, நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல சாடினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் கூறுகையில்;

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஏன் எமக்கு இன்னமும் வழங்கவில்லை? ஏற்கனவே முன்வைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மாற்றப்பட்டு புதிய பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தாக்குதல் தொடர்பில் முதலில் தகவல் தெரிந்தவர் மீது வழக்குத் தொடுக்கப்படாது அப்போதைய ஜனாதிபதியைக் குற்றவாளியாக்குவதன் மூலமாக இந்த வழக்குத் தோற்கடிக்கப்படும். நீதிமன்றத்தை மிதித்துக்கொண்டு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க முடியாது -என்றார். (த-22)

## நடுநிலை ஊடகப் பரம்பரையை உருவாக்கிய பெருமைக்குரியவர்

### ம.வ.கானமயில்நாதனுக்கு இரங்கல்

நடுநிலை பிறழா ஊடகப் பரம்பரையை உருவாக்கிய பெருமைக்குரியவர் இலங்கையின் மூத்த தமிழ்ப்பத்திரிகை ஆசிரியர்களுள் ஒருவரான ம.வ.கானமயில்நாதன். இவ்வாறு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளன சிரேஷ்ட ஆலோசகர் கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம் தெரிவித்துள்ளார்.

உதயன் - சஞ்சீவி பத்திரிகையின் வாழ்நாள் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனின் மறைவு குறித்து அவர் அனுப்பியுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; தினபதி - சிந்தாமணி காலம்முதல், யாழ். மண்ணின் உதயன் - சஞ்சீவி வரை அவருடன் இணைந்த, அவரால் வளர்க்கப்பட்ட பிராந்திய ஊடகவியலாளன் என்ற பெருமிதம் எனக்குள்ளது. ஒருமுறை கிழக்கிலிருந்து பிராந்திய ஊடகவியலாளர்கள் குழு யாழ்ப்பாணத்துக்குச் சென்றபோது, எம்மை வரவேற்று, உபசரித்து வாஞ்சையான நேசத்தை அவர் வெளிப்படுத்தினார். யாழ். மண்வாசனை கொண்ட பனம் பொருள் நினைவுப்பரிசையும் வழங்கிக் கௌரவித்தார்.

எவருக்கும் அஞ்சாத அவரது எழுத்துக்கள், எழுதி வந்த ஆசிரிய தலையங்கங்கள், சமூக விரோதிகளுக்கு சிம்மசொப்பனமாக அமைந்திருந்தன.

இதனால் அவர் பல்வேறு துன்பதுயரங்கள், நயவஞ்சகர்களின் உயிர் அச்சுறுத்தல்கள், அடாவடிகளை எதிர்கொண்ட போதும் இறுதி மூச்சு வரை அத்தனையையும் நெஞ்சு நிமிர்த்தி எதிர்கொண்டார். அடிக்கடி நான் சந்தித்து உரையாடும் போது 'ஐசே' என்று வாஞ்சையுடன் என்னை விளிக்கும் வார்த்தை, அவரை நினைவூட்டிக் கொண்டேயிருக்கும். அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். என்றுள்ளது. (ஒ-4-30)

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 08 . 1931



மறைவு 25 . 11 . 2021

### திருமதி
## மாசிலாமணி முத்துலட்சுமி

மூளாயை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாசிலாமணி முத்துலட்சுமி நேற்று (25.11.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்பிள்ளை வீரலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும், அன்னலட்சுமி (அமரர்), நாதஸ்வர வித்துவான் சத்தியமூர்த்தி (அவுஸ்திரேலியா-அமரர்), செல்வராணி (அமரர்) மற்றும் மனோராணி, இன்பராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 683) 1-6

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 12 . 2004



மறைவு 25 . 11 . 2021

## திஷாரா
### (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி)

அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திஷா என்று அன்பாக அழைக்கப்படும் திஷாரா (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) நேற்று (25.11.2021) கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிறேமச்சந்திரன் மற்றும் பவித்ரா ஆகியோரின் பாசமிகு மகளும், தனுசன் (யாழ் பல்கலைக்கழக, முகாமைத்துவ பீட 2ம் வருட மாணவன்) இன் அன்புத் தங்கையும், அரியரத்தினம், திலகரஞ்சிதம், காலஞ் சென்றவர்களான கந்தையா மல்லிகாதேவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நரேந்திரா (லண்டன்), அனுரா (லண்டன்), பிறேமலதா, யசோதா (லண்டன்), கௌசலா (லண்டன்), உதயகுமார் ஆகியோரின் மருமகளும், பிறேமதாஸ் மரிய வசந்தி ஆகியோரின் பெறா மகளும், அக்ஷயா (லண்டன்), சஸ்வின் (லண்டன்), ஆதிதன் (லண்டன்), ஆரணன் (லண்டன்), ஜன்சிகா, மோசிகா, நிதுஷன், கனுசிகா ஆகியோரின் மைத்துனியும், துஷான் டனிஷா ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.11.2021) மாலை 4 மணிக்கு 56 ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, செம்மணி வீதியில் அமைந்துள்ள நல்லூர் பரி யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**56, ஆசீர்வாதப்பர் வீதி,**
**அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.**
**T.P: 077 399 7807**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 689) 1-6

# மரண அறிவித்தல்



## சிவஸ்ரீ சின்னசாமிக்குருக்கள் செல்வராசாக்குருக்கள்

யாழ். வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ சின்னசாமிக்குருக்கள் செல்வராசாக் குருக்கள் கடந்த (23.11.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னசாமிக்குருக்கள் தங்கம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற ஐயாத்துரைக் குருக்கள் சிவபாக்கியம் அம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும், பராசக்தி அம்மா அவர்களின் அன்பு கணவரும், சாரதாதேவி, மதன்சுஜீந்திரநாத், கீர்த்திபிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவானந்தன், பிரியா, வசந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், கமலாதேவி, ஜெயரத்தினசிங்கம் மற்றும் பிறேமச்சந்திரன், விஜிதா ஆகியோரின் அன்பு சகோதரனும், விக்னேஸ்வரி, விக்கினேஸ்வரன், விக்னகுமாரி, விக்னராணி ஆகியோரின் மைத்துனனும், சிவானுஜன், சிவருஜன், சிவனிஜன், சேயோன், சுபானுஜன், சகானியா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (23.11.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**021 221 7511**
**076 651 2404**

(CS 41280) (3/6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 01 . 1935



இறப்பு 25 . 11 . 2021

## திரு. சுப்பிரமணியம் மயில்வாகனம்

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சுப்பிரமணியம் மயில்வாகனம் அவர்கள் நேற்று (25.11.2021) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற கந்தையாவின் மைத்துனரும், காலஞ்சென்ற மகேஸ்வரி, மற்றும் சறோஜினி தேவி ஆகியோரின் அன்புக் கணவரும், ஜீவானந்தன், காலஞ்சென்ற இராசையா, சிவசுப்பிரம்மணியம் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற தனேஸ் வரி, ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகபூசனி, வசந்தினி, பிரியதர்சினி, காலஞ் சென்ற கனகராசா, கருணாரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ஷினி, காலஞ் சென்ற பிரகாஷ், சுஜீவன், லோஜினி, பார்தீபன், சைலஜா, காலஞ்சென்ற தனுசன், துவாகரன், நிரோஜன், சிந்துஜன், சுவேதா, அபராஜிதன், பிரசாந்தன், யசிந்தன், பபிந்தன், பவிதரன், மதீபன், ஊர்மிளா, கஜீபன், சர்மிளா, சர்மிலன் ஆகியோரின் அன்புப் பேரனும், வைஷ்ணவி, லிணிசா, தஸ்வின், யானுஜன், யாதுனன், ருத்விகா, கம்சிகன், சஸ்வந், கோஷிதா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**20 A, செட்டித்தெரு லேன்,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 688) 1-6

# தொற்று 734, சாவு 27

கொழும்பு, நவ. 26
இலங்கையில் மேலும் 734 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப் பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 60 ஆயிரத்து 345 ஆக எகிறியுள்ளது. இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 27 பேர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள் ளனர். இதையடுத்து நாட்டில் கொரோ னாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 232 ஆக உயர்வடைந்துள்ளது. (து-22)


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண மாவட்ட செயலக காணி சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் **வே.சுகந்தன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**

**மோகனராணி கந்தசாமி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**பணிப்பாளரும்,**
**அனைத்து உத்தியோகத்தர்களும்**
**காணி சீர்திருத்த ஆணைக்குழு- வடக்கு மாகாணம்.**

(CS 685)1-6



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் கந்தசாமி செங்கைவேல்**
(செந்தில்)

தோற்றம் 09.02.1952
மறைவு 27.10.2021

ஆதரவாய் அன்பாய் இருந்தவரே கண்ணிமைக்கும் நேரத்தில் மீளாத் துயில் கொண்டு எம்மை ஆறாத்து யரில் தவிக்கவிட்டது ஏனோ?

கடந்த (27.10.2021) அன்று எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி ஜேர்மனியில் சிவபதம் அடைந்த எமது அருமை அண்ணனின் மரணச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மற்றும் சமூகவலைத்தளங்களினூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.11.2021) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்

என்றும் அன்னாரின் நினைவுகளுடன் வாழும்
**சகோதர சகோதரிகள்**

(cs41278) (2.6)



## பொது அறிவித்தல்
## மாநகரசபை யாழ்ப்பாணம்
## பாதீடு - 2022

யாழ் மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு (வரைபு) 2021.11.26 தொடக்கம் 2021.12.10 ஆம் திகதி வரை

- **யாழ் மாவட்டச் செயலகம்**
- **யாழ் பிரதேச செயலகம்**
- **நல்லூர் பிரதேச செயலகம்**
- **யாழ் மாநகர சபை - பொதுசனத் தொடர்பு பகுதி**
- **யாழ் பொது நூல்நிலையம்**
- **நவீன சந்தை - வாடிக்கையாளர் சேவை நிலையம்**

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளது. பொதுமக்கள் இவ் வரைபு பாதீட்டினை பரிசீலித்து பாதீட்டினை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளினை எதிர்வரும் 2021.12.10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் மாநகர சபை செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**முதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

**2021.11.26**
(CR 36467) (3/6)



## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 02.01.1941
விண்ணில் 05.12.2012

**அமரர் சின்னப்பா குணரத்தினம்**
(ஓய்வு நிலை உப தபால் அதிபர் - கனகராயன்குளம்)
திதி: அபரபக்க ஸப்தமி (26.11.2021)

கலகலப்பான சிரிப்பழகும்
சலனமற்ற திடமனமும் கொண்டு - எல்லோர்க்கும்
"குணம் அண்ணா" வாக வாழ்ந்த அப்பாவே - உங்கள்
மனம் போல எம் வாழ்வு அமைந்திட வழிகாட்டுங்களப்பா

இல : 695 / 2,
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுடன்,
**குடும்பத்தினர்**
(ஸ்ரேசன் றோட், பளை)

(CR 36470) (3.6)


## மின்சார வாகனங்களை இறக்குமதிசெய்ய ஆராய்வு

கொழும்பு, நவ. 26
மின்சாரத்தில் இயங்கும் வாகனங் களை இறக்குமதி செய்வது குறித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கவ னம் செலுத்தியுள்ளார்.

இலங்கையின் முதலாவது அதிநவீன தொழில்நுட்பத்திலான களனி கேபிள் பாலத்தை திறந்துவைக்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் எரி பொருளில் 71 சதவீதமானவை, வாக னங்களுக்கே பயன்படுத்தப்படுகிறது. இதனாலேயே நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அவ்வாறென் றால், மின்சாரத்தில் இயங்கும் வாக னங்களை நாம் ஏன் இறக்குமதி செய்ய முடியாது? என்ற கேள்வியையும் ஜனா திபதி எழுப்பினார். (து-இ)

## வடக்கு, வடமத்தியில் 26,000 ஹெக்ரேயர் பாதுகாக்கப்பட்ட காடுகள்

வனபாதுகாப்பு திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 26
வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங் களில் உள்ள 40 காடுகளை புதிய பாதுகாக்கப்பட்ட காடுகளாக வன பாது காப்பு திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி பாதுகாக்கப்படும் காடுகளை மொத்த நிலப்பரப்பு 26 ஆயிரம் ஹெக் ரேயர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை அடுத்து குறித்த காடுகளை அழித்து குடியேறுதல் மற் றும் விவசாய நிலங்களாக மாற்றுதல் என்பன தண்டனைக்குரிய குற்றமா கும் என்பது குறிப்பிடத்தக்கது. (து-இ)


## ஓராண்டு நினைவலைகள்



திருமதி
**வாலாம்பிகை தாமோதரம்பிள்ளை**

தோற்றம் 27.06.1930
மறைவு 07.12.2020
திதி. ஸப்தமி. 25.11.2021

அன்புத் தெய்வமே எங்கள் அம்மா
ஆண்டொன்று கழிந்தாலும் ஆறவில்லை எம்மனது
உண்ணாமல் உறங்காமல் வளர்த்த அம்மாவே
மண்ணிலே நாம் வாழ புண்ணியங்கள் பல செய்தீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

(CR 36466) (3/6)



## மரண அறிவித்தல்

**அருளானந்தம் செல்வகுமார்**



யாழ் நாச்சிமார் கோவிலடியை பிறப்பிட மாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் செல்வகுமார் கடந்த (24.11. 2021) கனடாவில் இறை வனடி எய்தினார்.

அன்னார் சுகந்தினியின் அன்புக் கண வரும், அருனன் அருஸ்ணவி ஆகி யோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா வில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சுதா
077 959 1037

(CS 687/01/06)



## இருபத்தொராம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சிதம்பரப்பிள்ளை செல்வரெட்ணம்**

திதி: ஸப்தமி

ஆண்டு பல சென்றாலும் உங்கள் நினைவு
எங்கள் மனதை விட்டுமாறாது
நீங்கள் இல்லாமல் எங்கள் வாழ்க்கை
சோகக் கடலில் மூழ்கியது
நித்தம் நித்தம் உங்கள் நினைவு
எங்கள் இதயத்தை வாட்டுகின்றது.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**வணங்குகின்றோம்**



சிவனாய் 11.11.1949
சிவமாய் 17.11.2000

பிரிவால்துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள் ,
பேரப்பிள்ளைகள்,
மச்சான் குடும்பத்தினர்.

20 A, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,

(cs.41277)
(2.6)

**பல்கலை....**
மூமை ஆரம்பமாகவுள்ளன.
பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு இத னைத் தெரிவித்தது.
எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதிவரை இந்த நடவடிக்கைகள் இடம்பெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

**யாழ்ப்பாணப்.....**
கள் நேற்று மலரஞ்சலி செலுத்தி ஆத்மார்த்த மாக அஞ்சலி செலுத்தினர்.
பல்கலைக்கழகச் சூழலில், இராணுவத்தினரும் பொலிஸாரும் இராணுவ பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் மாணவர்களை அச்சுறுத்துகின்ற வகையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் மாணவர்கள் ஆத்மார்த்தமாக அஞ்சலி செலுத்தினர்.
முன்னைய வருடங்களிலும் மாணவர்கள் இவ்வாறு மலரஞ்சலி செலுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-26)

**பயங்கரவாத...**
கவே தீர்மானித்துள்ளோம் - என்று, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவரிடம் இது பற்றி நாளை (இன்று) தெளிவுபடுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு -செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர்மட்ட அதிகாரிகள் இருவர் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கை வரவுள்ளனர். ஒளிப்பதற்கு ஒன்றும் இல்லை. அவர்கள் நாட்டின் எந்த பகுதிக்கும் செல்லலாம். எம்முடன் பேச்சுக்களை நடத்தலாம். எனினும், இலங்கையை மட்டும் இலக்குவைத்து திட்டமிட்டு உருவாக்கப்படும் பொறிமுறையை ஏற்கவே மாட்டோம் - என்றார். (த-44)


**யானைதாக்கி....**
மூந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதே பகுதியைச் சேர்ந்த அழகன் கோபால் ராஜ் (வயது - 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.
அவர் தனது வீட்டிலிருந்து மீன் பிடிப்பதற்காக நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் புறப்பட்டுச் சென்றிருந்தார். எனினும், நெடு நேரமாகியும் அவர் வீடு திரும்பிவராததால், அவரைத்தேடி அதிகாலை 2 மணிக்கு உறவினர்கள் சென்றபோதே காட்டுபகுதியில் அவர் இறந்து கிடந்துள்ளார். யானை தாக்கியதால் அவர் உயிரிழந்தார் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (த-19)

**படகுப்பாதை....**
தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம், எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
திருகோணமலை நீதிமன்ற நீதிவான் பயாஸ் ரசாக் முன்னிலையில், தவிசாளரை பொலிஸார் நேற்று முற்படுத்தினர். அதன்போதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
திருகோணமலை - கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் உயிரிழந்த படகுப் பாதை விபத்து தொடர்பில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட மூன்று பேரையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது. படகுப் பாதையின் உரிமையாளர், செலுத்துநர் மற்றும் கட்டணம் பணம் வசூலிப்பவர் ஆகிய மூவருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
கவனயீனமாக செயற்பட்டு 6 பேருக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியமை மேலும் 20 பேருக்கு காயமேற்படுத்தியமை தொடர்பில் அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
திருகோணமலை - கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் கடந்த செவ்வாய்க்கிழமை படகுப் பாதை கவிழ்ந்ததில், மூன்று வயதுக்கும் 8 வயதுக்கும் இடைப்பட்ட 4 சிறுவர்களும், 32 வயது பெண் ஒருவரும் 70 வயது ஆண் ஒருவரும் உயிரிழந்திருந்தனர். (த-இ)

**சிலிண்டர்கள்....**
வெவ்வேறு மூன்று இடங்களில் சிலிண்டர்கள் வெடித்துள்ள விடயம் சர்ச்சையாகியுள்ளநிலையில், கொட்டாவ பன்னிப்பிட்டிய பகுதி வீடு ஒன்றில் நேற்று எரிவாயு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இதைவிட, கடந்த 4 ஆம் திகதி வெலிகம கப்பரதொட்ட பகுதியிலுள்ள உணவகமொன்றில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர். கடந்த 16 ஆம் திகதி இரத்தினபுரி பகுதியில் அமைந்துள்ள ஹொட்டலொன்றில் வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றது. பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சமையல் எரிவாயு கசிவே காரணம் என்று உறுதிப்படுத்தப்பட்டது. கடந்த 20 ஆம் திகதி, கொழும்பிலுள்ள குதிரைப் பந்தய திடலின் பார்வையாளர் கூடத்துக்கு அருகிலிருந்த உணவகத்தில் இடம்பெற்ற வெடிப்புவங சம்பவத்தில் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். இந்த வெடிப்பு சம்பவத்துக்கும் சமையல் எரிவாயு கசிவே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.
வீடுகளில் பாவிக்கும் சமையல் எரிவாயு சிலிண்டரில் காணப்படும் அளவில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் அவை வெடிக்கக்கூடிய அபாயம் காணப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர் , எச்சரிக்கை விடுத்துள்ளார். (த-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 06 . 1924



மறைவு
25 . 11 . 2021

### ஜோசேப் செல்லத்துரை இராஜரட்ணம்

உடுத்துறை ஆழியவளையைப், பிறப்பிடமாகவும் பருத்தித்துறை 'பெத்தனி' கடற்கரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசேப் செல்லத்துரை இராஜரட்ணம் அவர்கள் நேற்று (25.11.2021) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.
Hartly கல்லூரியின் முன்னைநாள் கணித ஆசிரியரும், இலங்கை மெதடிஸ்த திருச்சபை பருத்தித்துறை, கட்டைவேலிச் சேகரத்தின் மூத்த உறுப்பினரும், பருத்தித்துறை திருச்சபையின் சபை உக்கிராணக்காரரும், சபைவழிகாட்டியும், நேசக சிற்றாலயத்தின் இயக்குநரும், உள்ளூர் அருளுரையாளருமாவார்.
அன்னார் காலஞ்சென்ற திருமதி சிசிலியா குணமணியின் அன்புக் கணவரும், ரஜனி(கனடா), ராஜசீலன் (அமெரிக்கா), ராஜபாலன் (சிங்கப்பூர்), ராஜசெல்வம் (கனடா), ராஜகருணா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், குயின் ரேஸ், நிர்மினி, ருக்லாந்தி, அருணிக்கா, மைதிலி ஆகியோரின் மாமனாரும், டானியேல், அனா, யோணத்தன், செரில், அனிஷா, அன்றூ, எலனா ஆகியோரின் பேரனும், நோவாவின் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (26.11.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில், வைக்கப்பட்டு, பிற்பகல் 4 மணிக்கு நல்லடக்க வழிபாட்டிற்காக பருத்தித்துறை மெதடிஸ்த ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அதன் நிறைவில் மெதடிஸ்த திருச்சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறை, கட்டைவேலி,
(சேகரம்)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 689) 1-6

## மரண அறிவித்தல்



### குணசேகரம் கணேஸ்வரி (குணம் அக்கா)

கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் மறவகுறிச்சி பூநகரியை வதிவிடமாகவும் கொண்ட குணசேகரம் கணேஸ்வரி (குணம் அக்கா) நேற்று (25.11.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.
அன்னார் குணசேகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (வைத்தியர்), வல்லவாம்பிகை ஆகியோரின் மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து அன்னம்மா தம்பதியரின் மருமகளும், தங்கலட்சுமி, சிவகுருநாதன் (லண்டன்), கந்தசாமி (கொலன்ட்), வடிவாம்பிகை, அமரர் Dr.பொன்னையா, தில்லைநாதன் (லண்டன்), இந்திராதேவி, லிங்கநாதன் (லண்டன்), மங்கையர்க்கரசி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், குணசீலன் (சீலன்), குணபாரதி (சூட்டி), குணவானதி (Beauty), குணதீபன் (தீபன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலைவாணி, கருணாகரன் (கண்ணன்), அனுஷாந் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிகல்யா, தன்ஷிகன், சுருதிகா, சங்கவன், சங்கவி, ரிதுசன், ஆகியோரின் அருமை பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், லீலாவதி, அரியரத்தினம் (பிரசித்த நொத்தாரிசு), பரமேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், தம்பிராசா சின்னம்மா ஆயோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் மறவகுறிச்சி பூநகரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (26.11.2021) மு.ப 11.00 மணிக்கு பூநகரி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 686) 1-6

## நினைவேந்தல்...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற
வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை
விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்
றுகையில் இது தொடர்பில் கருத்து வெளி
யிட்ட எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்
மன் கிரியல்ல மேலும் கூறியவை வரு
மாறு,

"போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூ
ரும் நடைமுறை உலக நாடுகளிலும் உள்
ளது. 2ஆம் உலகப்போரில் உயிரிழந்த
ஜேர்மன் படையினரை, பிரிட்டன் படையி
னர் வருடாந்தம் நினைவுகூருகின்றனர்.
அதேபோல ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது
கொல்லப்பட்டவர்களை அந்தக்கட்சியினர்
நினைவுகூருகின்றனர். அதில் தவறு கிடை
யாது. எனவே, நினைவுகூரலை தடுப்ப
தற்கு அரசு முன்னெடுக்கும் நடவடிக்
கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை
கூட கண்டித்துள்ளது.

**படுதோல்வி**

அதேவேளை, பொருளாதாரத் தடைக்கு
அஞ்சியே மஹிந்த ராஜபக்ச முன்கூட்டியே
தேர்தலுக்கு சென்றார். சர்வதேச விவகா
ரங்களின்போது மஹிந்த ராஜபக்ச பய
ணித்த வழியிலேயே கோத்தாபய ராஜபக்
சவும் பயணிக்கின்றார். முதல் ஆண்டி
லேயே ஐ.நா. மனித உரிமைகள் பேரவை
யில் படுதோல்வி ஏற்பட்டுள்ளது. அடுத்த
மார்ச் மாதம் என்ன செய்ய போகின்றீர்
கள்? இலங்கை தொடர்பில் முன்வைக்கப்ப
ட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கவ
னம் செலுத்துங்கள்.

எமது ஆட்சியின்போது தேசிய கீதத்தின்
ஒரு பகுதி தமிழிலும் இசைக்கப்பட்டது. சர்
வதேச சமூகம் இதனை வரவேற்றது. ஜி 7
மாநாட்டுக்கு சென்றிருந்த அப்போதைய
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை,
ஜி7 நாடுகளின் தலைவர்கள் பிரதான
மேசைக்கு அழைத்தனர். அவ்வாறான
தொரு நம்பிக்கையை நாம் ஏற்படுத்தி
னோம். சிறுபான்மையின மக்களை துன்
புறுத்தும் அரசுக்கு ஒருபோதும் சர்வதேச
உதவி கிடைக்காது." என்றார். (கு-44)

## நினைவு....

கொள்ளமுடியாது, எனினும், இறந்தவர்க
ளுக்கு பொதுவான நினைவுகூரல்களை
மேற்கொள்ளமுடியும். - என்று, முல்லைத்
தீவு நீதிமன்று திருத்தி அமைத்துக் கட்டளை
பிறப்பித்தது.

முல்லைத்தீவு நீதிமன்றம் மாவீரர் நாள்
நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு கடந்த 17,
23ஆகிய திகதிகளில் வழங்கிய தடைக்கட்
டளையையே நேற்று திருத்தியமைத்து
கட்டளை பிறப்பித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள்
நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவ
தற்கு கடந்த 17ஆம் திகதி மற்றும் 23 ஆம்
திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தைச்
சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட
72 பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு
பிறப்பித்திருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு,
முள்ளியவளை, ஒட்டுசுட்டான், மாங்குளம்,
மல்லாவி, ஐயங்கன்குளம், புதுக்குடியிருப்பு
ஆகிய ஆறு பொலிஸ் நிலையங்களால்
நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்
பட்டமைக்கு அமைவாக குறித்த 72 பேருக்
கும் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.
இந்தநிலையில், தடைக்கட்டளைகளில்
பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டி
ருந்தவர்களில் முன்னாள் நாடாளுமன்ற
உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, வடக்கு
மாகாணசபை முன்னாள் உறுப்பினர்
து.ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேச
சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், புதுக்
குடியிருப்புப் பிரதேசசபை உறுப்பினர்
சி.குகநேசன், சமூகசெயற்பாட்டாளர் த.
யோகேஸ்வரன் ஆகியோர், மாவீரர் நாள்
நினைவேந்தல் நிகழ்வுக்கான தடை உத்த
ரவை நீக்கக்கோரி நீதிமன்றில் நேற்று
நகர்த்தல்பத்திரம் செய்திருந்தனர்.

அதை ஆராய்ந்த நீதிபதி ரி.சரவணராஜா,
ஏற்கனவே வழங்கிய மாவீரர் நாள் நினை
வேந்தலை மேற்கொள்வதற்கு எதிரான
கட்டளையை திருத்தி அமைத்து கட்டளை
வழங்கினார். (த-246)

## எனது...

என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் அலு
வல்கள், அமைதியைக் கட்டியெழுப்பல்
மற்றும் அமைதிச் செயற்பாடுகள் தொடர்
பான உதவிப் பொதுச் செயலாளர் கலீட்
கியாரி இலங்கைக்குப் பயணம் மேற்
கொண்டு, ஜனாதிபதி செயலகத்தில், ஜனா
திபதியை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையா
டினார்.

அதன்போதே அவரிடம் ஜனாதிபதி மேற்
கண்டவாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி
ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது கூட்
டத்தொடரின்போது, பொதுச் செயலாளர்
அன்ரனியோ குட்டரெஸுக்கும் ஜனாதிபதிக்
கும் இடையில் நடைபெற்ற இருதரப்பு சந்
திப்பின் பிரதிபலனாகவே, கலீட் கியாரி
இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அனைத்து இன மக்களும் சுதந்திரமாக
வாழக்கூடிய சூழல் ஒன்று இலங்கையில்
காணப்படுகின்றது.

இனங்களுக்கிடையில் ஒற்றுமையை கட்டி
யெழுப்புவதற்காக அரசாங்கம்
நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதை அவரி
டம் தெரிவித்ததுடன், அது தொடர்பாக
எவ்வித சந்தேகமும் கொள்ளவேண்டாம்
என்றும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்
என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில், ஐக்கிய நாடுகள் சபை
யின் இலங்கைக்கான வதிவிட இணைப்பா
ளர் ஹனா சிங்கர் - ஹம்டி, ஐக்கிய நாடு
கள் சபையின் அரசியல் மற்றும் அமைதி
நடவடிக்கைகள் துறையின் அரசியல்
அதிகாரி ஷியாக்கி ஓடா ஆகியோரும் ஜனா
திபதி தரப்பினரும் கலந்துகொண்டனர். (த)

## தலைவர்....

ன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின்
பிறந்தநாள் இன்றாகும். அதனால், அவர்
பிறந்த இடமான வல்வெட்டித்துறை மற்றும்
யாழ்ப்பாண மாவட்டம் உட்பட வடக்கிலும்
கிழக்கிலும் முக்கிய நகர்ப்பகுதிகள், சந்திக
ளில் படையினரதும் பொலிஸாரினதும்
நடமாட்டங்கள் அதிகரித்துள்ளன. அதிகள
வான இடங்களில் அவர்கள் நிலைகொண்
டுள்ளனர். சில இடங்களில் வீதியில் செல்
வோரை வழிமறித்து ஆவணங்களை
சோதனையிட்டனர் என்றும் தெரிவிக்கப்ப
டுகின்றது.

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில்,
வேலுப்பிள்ளை பார்வதிஅம்மாள் தம்பதி
யினருக்கு 1954ஆம் ஆண்டு இதே மாதம்
இதே நாளில் நான்காவது பிள்ளையாக
பிரபாகரன் அவதரித்தார். இன்று அவ
ருக்கு வயது 67.

2009ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்டபின்
னர் அவருடைய பிறந்தநாள் கொண்டாட்
டங்கள் இலங்கையில் பொதுவெளியில்
இடம்பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பி
டத்தக்கது. (அ)

## குறிஞ்சாக்கேணிக்கு...

திட்டங்களும் உரிய காலத்துக்குள் பூர்த்தி
செய்யப்படும் என்று தெரிவித்த நெடுஞ்சா
லைகள் அமைச்சின் செயலாளர், கிண்
ணியா - குறிஞ்சாக்கேணிக்கு 9 மாதங்க
ளுக்குள் பாலம் அமைக்கப்படும் என்றும்
உறுதியளித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடை
பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர்
மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள அனைத்துக் கிளை வீதிகள்
மற்றும் உள்நுழைவு வீதிகளையும் அபிவி
ருத்தி செய்து, அவற்றை பிரதான வீதிக்
கட்டமைப்புடன் தொடர்புபடுத்துவதற்கான
நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.
2024ஆம் ஆண்டுக்குள், மத்திய அதி
வேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணி
கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும்.
கொழும்பு நகரின் போக்குவரத்து நெரிச
லுக்குக் காரணமாகவுள்ள அனைத்துச்
சந்திகளையும் விரிவுபடுத்த நடவடிக்கை
எடுக்கப்பட்டுள்ளதோடு, புதிய தொழில்நுட்
பத்துடன் கூடிய சமிக்ஞை விளக்குக் கட்ட
மைப்பைப் உருவாக்கவும் திட்டமிடப்பட்டு
ள்ளது. இடைஞ்சல்கள் உள்ள இடங்களில்
மேம்பாலங்கள் அமைத்தல் போன்ற
மாற்று வழிகளைக் கையாண்டு, போக்கு
வரத்து நெரிசலுக்குத் தீர்வுகாண நடவ
டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதான வீதிக
ளுக்கு அருகாமையில் மாற்று வீதிகளை
நிர்மாணிக்கவும் யோசனை முன்வைக்க
ப்பட்டுள்ளன.

கொழும்பு - புத்தளம் வீதியை அபிவிருத்தி
செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. சிலாபம்
நகரம் மற்றும் அந்த வீதியின் ஒரு பகுதி
மழை நீரால் பாதிக்கப்பட்டதால், அதனைத்
தடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்
ளன என்று தெரிவித்தார்.

இதேவேளை, நீர், மின்சாரம், டெலிகொம்
போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்க
ளைச் செயற்படுத்தும் போது, நிர்மாணப்
பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளுக்கு
ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்
கொள்வதற்காக இதுவரை காணப்பட்ட
முறைமைக்குப் புறம்பாக, உரிய நிறுவ
னங்களுடன் வீதி அபிவிருத்தி அதிகார
சபை பேச்சுக்களை நடத்தி, புதிய உத்திக
ளைக் கையாளத் திட்டமிடப்பட்டு ள்ளது
என்று, வீதி அபிவிருத்தி அதிகார சபையின்
பணிப்பாளர் நாயகம் சர்தா வீரகோன் தெரி
வித்தார்.

அதன்படி, ஏனைய நிறுவனங்கள் முன்
னெடுக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டங்க
ளுக்குப் பயன்படுத்துவதற்காக, வீதியின்
இருபுறமும் இரண்டு மீற்றர் பகுதி
யொன்றை ஒதுக்கியவாறே வீதி அபிவி
ருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடு
க்கத் திட்டமிட்டுள்ளது என்று அவர் தெரி
வித்தாரென, ஜனாதிபதி ஊடகப்பிரிவு
குறிப்பிட்டது. (த)

## வெடித்துச்......

ணர்களைக் கொண்டு விசேட பரிசோத
னைகளை முன்னெடுத்து, அதன் அறிக்
கையை நாட்டுக்கு வெளிப்படுத்துங்கள்.

இவ்வாறு, அரசாங்கத்தை வலியுறுத்தியுள்
ளது ஐக்கிய தேசிய கட்சி.

அத்தோடு மக்களின் உயிரை அச்சுறுத்த
லுக்கு உள்ளாக்கும் சமையல் எரிவாயு
நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான
நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும்
ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம்
கோரியுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின்
பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார
வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பில்,

நாட்டு மக்களுக்குத் தேவையான சமையல்
எரிவாயுவை வழங்குவதில் அரசாங்கம்
ஆரம்பத்திலேயே தோல்வியடைந்தது.
எனினும், தற்போது அரசாங்கமானது
வெடிக்கக் கூடிய சமையல் எரிவாயு சிலிண்
டர்களை அல்லது எரிவாயு வெடிகுண்டு
களை மக்களுக்கு விநியோகித்துக் கொண்
டிருக்கிறது.

இதுவரையில் கொழும்பு, கண்டி, வெலி
கம, கொட்டாவ மற்றும் ஹோகந்த என
பல்வேறு பகுதிகளிலும் சமையல் எரிவாயு
கசிவால் வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்
ளன.

தற்போது சமையல் எரிவாயு நுகர்வோரின்
உயிர் மிகுந்த அபாயத்தில் உள்ளது.
பொதுமக்களின் உயிர் இவ்வாறான
வெடிப்பு சம்பவங்களால் அச்சுறுத்தலுக்கு
உள்ளாகுவதற்கு இடமளிக்கமுடியாது.
அது மாத்திரமன்றி குறித்த பரிசோதனை
அறிக்கைகளை எவ்வித ஒளிவு மறைவும்
இன்றி நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.
என்றார். (த-இ)

## இன்றும்...

நேற்றுமாலை 5.30 மணிக்கு விடுத்த
அறிக்கையில் இந்த விடயம்
குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு தென்கிழக்காகவும் அண்
மையாகவுள்ள தென்மேற்கு வங்காள
விரிகுடாவில் காணப்பட்ட கீழ் வளிமண்ட
லத் தளம்பல் நிலையானது குறைந்த காற்
றமுத்தப் பிரதேசமாக விருத்தியடைந்து
தற்போது இலங்கைக்கு கிழக்காக நிலை
கொண்டுள்ளது.

அதனால், நாடு முழுவதும் வானம் மேக
மூட்டமாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்
படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைக
ளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக
பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்
கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை
குறைத்துக்கொள்ள தேவையான முன்
னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்
கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்
படுகின்றார்கள் - என்றுள்ளது.

வடக்கில் நேற்றுப்பகல் இடைக்கிடையே
மழையும் மாலையில் கனமழையும் பெய்
துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

## வவுனியாவில்...

கில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 66 அங்
கத்தவர்களும், தெற்கில் ஒரு குடும்பத்தைச்
சேர்ந்த 03 அங்கத்தவர்களும், வெங்கல
செட்டிகுளத்தில் 08 குடும்பங்களைச்
சேர்ந்த 35 அங்கத்தவர்களுமாக நான்கு
பிரதேச செயலக பிரிவுகளிலும் 31 குடும்
பங்களைச் சேர்ந்த 115 பேர் பாதிப்படைந்
துள்ளனர். 3 வீடுகள் பகுதியளவில் சேதம
டைந்துள்ளன.

இதேவேளை, வவுனியாவில் உள்ள
அநேக குளங்கள் வான் பாய்கின்றமை
யால் திருநாவற்குளம் பகுதி, கூமாங்கு
ளத்தின் சில பகுதிகள், மதுராநகர், நெடுங்
கேணி போன்ற பிரதேசங்கள் பாதிப்புக்குக்
குள்ளாகியுள்ளன.

மேலும் பாவற்குளத்தின் வான்கதவுகளின்
ஊடாக செல்லும் நீரின் அளவை அதிக
ரிக்க கதவுகளைத் திறக்கும் அளவு அதிக
ரிக்கப்பட்டுள்ளது. எனவே, வவுனியா
நெளுக்குளம், செட்டிகுளம் பிரதான வீதி
யானது இரவு(நேற்று) 9 மணி தொடக்கம்
(இன்று) காலை 5 மணி வரை
மூடப்பட்டிருக்கும் என்று இடர் முகாமை
த்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் வவுனியா பேராறு நீர்த்தேக்க
த்தின் நான்கு வான்கதவுகளில் ஒரு கதவு
நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு திறக்
கப்பட்டது. ஏனைய 3 கதவுகளும் நேற்று
இரவு 9 மணிக்கு திறக்கப்ப ட்டன.

மேலும் பாவற்குளம் மற்றும் பேராறு நீர்த்
தேக்கத்துக்கு அருகிலுள்ள மக்கள் மிகுந்த
அவதானத்துடன் இருக்குமாறும் இடர்
முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்
றது. (கு-110)

# கோத்தாபய அரசு இரட்டை வேடம்!

## அம்பலப்படுத்தினார் சஜித்!



**கொழும்பு, நவ.26**

**ஜனாதிபதித் தேர்தலின்போது மக்களுக்கு இரசாயன உரத்தை இலவசமாக வழங்குவதாக வாக்குறுதியளித்த அரசு 10 வருடங்களில் இலங்கை படிப்படியாக இயற்கை விவசாயத்தை நோக்கி நகரும் என தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தது. ஆனால் அந்த வாக்குறுதிகளை மீறுவதற்குத் தற்போது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வரவு - செலவுத்திட்டத்தில் ஒரு ரூபா கூட ஒதுக்கப்படவில்லை.

உரத் தடையை இரவோடு இரவாக நீக்கியதாகக் கூறும் அரசு காலையில் அவ்வாறான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று கூறுகின்றது.

மாலையில் வர்த்தமானியை மீளப்பெற்றுக் கொள்கிறது.

நஞ்சற்ற விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக 4 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்று கூறும் அரசு, இயற்கை விவசாயத்தை மேற்கொள்ளகளைகளை அகற்ற இரண்டு ஹெக்ரேயருக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என்றும் கூறுகின்றது.

சேதன உர உற்பத்திக்காக விவசாயிகளுக்கு 35 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கும் அதே வேளை தனியார் நிறுவனங்களுக்கு இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பது ஏன்?. என்றார். (எ-இ)



## ஏணி சரிந்து விழுந்ததில் வீதிப்போக்குவரத்து தடை

முல்லைத்தீவு,நவ.26

நீர்த்தாங்கி அமைக்கும் பணிக்காக பொருத்தப்பட்ட ஏணி சரிந்து விழுந்ததில், அந்தப் பகுதிக்கான உள்ளக வீதிகளின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - ஹிச்சிராபுரம் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால், நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு வருகின்றது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால், நீர்த்தாங்கி அமைக்கும் பணிக்காக பொருத்தப்பட்ட ஏணி சரிந்து விழுந்தது. அதில் அருகில் இருந்த காணி உரிமையாளர்களின் வேலிகள் சேதமாக்கப்பட்டன. உள்ளக வீதிகளின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. மின்னிணைப்புக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர், ஒப்பந்தகாரர்கள் ஊடாக பாதிப்புக்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படும் என்று தெரிவித்தனர்.

மின்சார சபையினர் குறித்த பகுதிக்கான மின் இணைப்பை துண்டித்து, குறித்த பாகங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-419)



## கசிப்பு விற்பனை இரண்டு பேர் கைது

கிளிநொச்சி,நவ.26

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருவேறு பகுதிகளில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அதற்கமைவாக கல்மடு நகர்ப்பகுதியில் ஒருவரும், உழவனூர்ப் பகுதியில் இன்னொருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஒ-4113)

## சாணக்கியனின் கூற்றுக்கு உறவுகள் கடும்கண்டனம்



யாழ்ப்பாணம், நவ. 26

எமது போராட்டத்தை தானே வழிநடத்தியிருந்தேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், புலம்பெயர் தேசத்தில் தெரிவித்தகூற்று முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று, வடக்கு- கிழக்கில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது. சாணக்கியனின் கூற்றை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. அரசியல் கட்சியோ அல்லது தனி நபரோ எமது சங்கம் தவிர்ந்த வேறு அமைப்புக்களும் எமது போராட்டத்துக்கு உரிமை கோரமுடியாது,கோரவும் கூடாது.

நான்கு வருடங்களையும் கடந்து, தொடரும் எமது போராட்டத்தில் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம், சர்வதேச சிறுவர் தினம், சர்வதேச மனித உரிமைகள் தினம் என பல நாள்களில் பேரணிகளையும், போராட்டங்களையும் நடத்தி, சர்வதேசத்தின் கவனத்தை எம் போராட்டத்தின் பக்கம் ஈர்த்துள்ளோம்.

அதன்போது அரசுக்குத் துணைபோகும் தீய சக்திகளாலும், போராட்டத்தை தம் கையிலெடுக்க முயலும் பிரமுகர்களாலும் எமக்கு தடைகள் ஏற்படுத்தப்படுவது வழமை. பொது மக்களின் பங்களிப்புடன் அவற்றை முறியடித்திருக்கின்றோம் - என்று சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (து)

**காணி தேவை**

இயக்கச்சி, பளை, முகமாலை, எழுதுமட்டுவாழ் ஆகிய இடங்களில் காணி தேவைப்படுகிறது. தரகர்கள் தேவையில்லை. (CS 41279) (3/6)

தொடர்பு : 077 871 2347

**வீட்டு பணிப்பெண் தேவை**

உரும்பிராய் முதலாம் ஒழுங்கையில் உள்ள வீட்டிற்கு சமையல் மற்றும், வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

வயது எல்லை 30 – 50 விரும்பத்தக்கது.

சம்பளம் நாள் ஒன்றுக்கு ரூபா 750.00

தொடர்பு: 077 200 4857 (CR 36469 )(3/6)

**Nillanthan English workshop**

**நிலாந்தன் ஆங்கிலப் பயிலகம்**

புதிய பிரிவுகள் ஆரம்பம் 28.11.2021

ஞாயிற்றுக்கிழமை 8.00 am

30, தலங்காவல் பிள்ளையார் கோவில் வீதி, திருநெல்வேலி.

தொடர்பு 077 239 5874 (CR 36468) (3/6)

**வெளிநாட்டில் உடன் வேலைவாய்ப்பு**

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அனுமதியுடன் முற்றிலும் பாதுகாப்பான முறையில் ஓமான். பஹ்ரைன் போன்ற நாட்டில் பணியாற்றுவதற்குப் பணிப்பெண்கள் அனுப்பிவைக்கப்படும். (வயது 25 தொடக்கம் 50 வரை)

நிறுவனங்கள். வைத்தியசாலைகள். வங்கிகளில் பணியாற்றுவதற்கு முற்றிலும் இலவசமாக அனுப்பிவைக்கப்படுவதுடன் முற்பணம் வழங்கப்படும்.

(சம்பளம் 100.000 /-)

ஓமான் ஒரு றியாள் இலங்கை ரூபாய் மதிப்பு 527.16 /-

பஹ்ரைன் ஒரு டினார் இலங்கை ரூபாய் மதிப்பு 537.37 /-

உடனடித் தொடர்புகளுக்கு , 077 722 8231 (CS 00925) (3/6)






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.